ஆசிரியர்: போதகர் வே.மகாராஜா

# அனல்

01.01.2019

புதுமலர்: 16 தை - மாசி இதழ்: 01

## 'நினைவுகூரும் ஆண்டு'

## 2019



கர்த்தர் நம்மை
நினைத்திருக்கிறார்,
அவர் ஆசீர்வதிப்பார்.

சங்கீதம் 115:12

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்:
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

# பொருளடக்கம்


01. அனலின் குரல்
02. கவிதை
03. கதையும் கற்றதும்
04. வாலிபர் வளாகம்
05. உன்னோடு வருவார்
06. பெண்கள் பக்கம்
07. வினா விடை - 91
08. சிறுவர் வட்டம்
09. நற்செய்திப்பகுதி
10. அருட்பணியாளர் சரிதை
11. குறுக்கெழுத்துப்போட்டி - 89
12. தலைமைப் போதகரின் வாழ்த்துச் செய்தி
13. அனலின் புத்தாண்டு வாக்குத்தத்தச் செய்தி
14. ஒய்வும் தேவை






# ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

## எழுத வேண்டிய முகவரி:

**சீயோன் ஜெபக்குழு,**
**347, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம், இலங்கை.**



**Zion Prayer Group,**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**




## மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**ஆசிரியர் "அனல்",**
**347, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம், இலங்கை.**
**The Editor "Anal",**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**



*T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk*

திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக – எரேமியா 49:11 –



# அனலின் குரல்

அனல் வாசக நெஞ்சங்களுக்கு அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுவதாக.

2018ஆம் ஆண்டு முழுவதுமாக எங்களை பாதுகாத்து வழிநடத்திய இரட்சகர் இயேசுவுக்கு சகல மகிமையும் உண்டாவதாக. கடந்த வருடம் முழுவதும் அனல் உங்கள் கைகளில் கிடைக்கும்படி வழிநடத்திய கர்த்தருக்கு மகிமையுண்டாகட்டும்!

எமது செயலுக்கேற்ற பலன் பெறும் நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. **"அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது – வெளி. 22:12"**. இவ்வாண்டு தேவனுடைய விருப்பப்படியான ஓர் வாழ்வுக்காக உங்களை அர்ப்பணியுங்கள். **நித்திய நியாயாதிபதியான இயேசு மனுக்குலத்தை நியாயம் தீர்க்க வருகிறார்!**. உன் உண்மையான நிலையை அப்படியே கண்டு கொண்டிருக்கிறார், உன்னையும் என்னையும் பரிசுத்தப்படுத்தும்படி தன் தூய இரத்தத்தைச் சிந்திய தேவன் அந்த இரத்தத்தை அவமதிக்க எவருக்கும் இடங்கொடுக்கமாட்டார்.

இந்த வருடத்தில் ஒருவேளை எந்தவொரு சிட்சைக்குள்ளோ, தண்டனைக்குள்ளோ கொண்டு செல்ல முன் மனம் திரும்புதலுக்குள் வருவீர்களா? அவருடைய தண்டனையின் பலன் கிடைக்குமுன் நித்திய நியாயாதிபதிக்கு முன்பதாக எம்மை அர்ப்பணிப்போம். கிருபையின் நாட்களில் மெய்யான பரிசுத்தனாய் வாழ இயேசு உன்னை அழைக்கிறார்.




**"மெய்யாகவே சீக்கிரமாக வருகிறேன் - வெளி 22:20"**

- ஆசிரியர் -




60வருடங்களை கர்த்தருடைய கிருபையினால் தாண்டிவர சீயோன் தேவாலயத்திற்கு தேவன் கிருபை தந்திருக்கிறார்.

ஆகவே இந்த சிறப்பான ஆண்டில் தேவனுடைய நிறைவான கிருபை பெற்று, மேலும் தேவ பணியாற்றி தேவ ராச்சியத்தின் மேன்மைக்காய் உழைக்க அனலின் வாழ்த்துக்கள்!. இத்தனை வருடங்களும் சபையின் வளர்ச்சிக்காக எந்தெந்த வழிகளில் யார் யார் உழைத்தார்களோ அவர்கள் ஒவ் வொருவருக்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துகின்றேன்.!

- ஆசிரியர் -





புத்தம் புதிய ஆண்டு புதுமைகள்
பல கண்டு முழுவதும் ஆண்டவரோடு
உறவு பூண்டு
உள்ளத்தில் எள்ளளவும் கறை தாண்டி
தூய்மையின் நிறை கொண்டு வாழ்வும்
ஆவியில் விடுதலையும், மாமிசத்தை மேற்கொண்டும்,
குறைவு நிறைவாகவும், எதிர்பார்ப்புகள்
பூர்த்தியாகவும்
ஆவியில் நிறைந்து, ஆனந்தத்தில் திளைத்து,
தேவ சமாதானத்தால் நிறைந்து உள்ளங்கள்
தேற்றப்பட, ஆரோக்கியம் தொடர
அனலின் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுவதாக.

- ஆசிரியர் -

# எது புதிது?
# கிறிஸ்துவுக்குள் இருந்தால் நீ புதிது!...

காலம் புதிதாவது அல்ல புதிது
மனம் புதிதாகி மறுரூபமாக்கப்படுதலே புதிது
கால ஓட்டம் மாறுவதல்ல புதிது
கால ஓட்டத்தால் நாம் தேவ சாயல் பெறுதலே புதிது
அசுத்தம் களைந்து தூய்மை தரித்தல் புதிது
வன்மை நீங்கி மென்மை அணிவது புதிது
ஆதாம் சுபாவம் நீங்கி ஆண்டவர் சுபாவம் அணிதல் புதிது
அந்தகார தன்மை நீங்கி ஆவியின் தன்மை பெறுதல் புதிது
பொய்மை களைந்து மெய்மை பேசுதல் புதிது
வெளிவேஷமின்றி நிஜமாய் வாழ்வது புதிது
பாவத்தை மறைப்பதல்ல புதிது




பாவத்தை அறிக்கை செய்வது புதிது
சிந்தனை நேர்மையாவது புதிது
மனச்சாட்சி மழுங்காதிருப்பது புதிது
மனமேட்டிமையற்றது புதிது
மனிதனை மதித்து வாழ்வது புதிது
தேவனை நேசிப்பது புதிது
உன்னைப் போல மற்றவரை நேசிப்பது புதிது
உதட்டளவு வாழ்வல்ல புதிது
உள்ளதளவு நிலையே புதிது



உன் வார்த்தையின் அளவல்ல புதிது
வாழ்க்கையின் அளவே புதிது
மாமிச வாழ்வு வாழ்வதல்ல புதிது
ஆவியினாலே மாமிசத்தை அழிப்பது புதிது
உலகத்து ஒத்த வேஷம் போடுவதல்ல புதிது
பரலோக பிரமாண வாழ்வு வாழ்தலே புதிது
புதிய ஆண்டில் புகுந்திடுவோம் புதிது
புதிதாக்கும் கிறிஸ்துவின் இரத்தத்துக்குள் இருப்பது புதிது
பழையவைகளை ஒழிப்பது புதிது
**கிறிஸ்துவுக்குள் இருந்தால் நீ புதிது!....**







# பொய் பேசாதிருங்கள்

வை. விமலதாஸ்

டேவிட் ஒழுங்காக தேவாலயம் சென்று, பெற்றோருக்கும் பெரியோருக்கும் மரியாதை கொடுத்து நடக்கும் கீழ்ப்படிவுள்ள பிள்ளை. ஒரு நாள் டேவிட் தன் வீட்டில் பாடங்களைப் படித்துக் கொண்டிருந்தான். அப்போது சுனில் அங்கு வந்தான். அவன் எப்போதும் விளையாட்டுத்தனமாகவும், குறும்புகள் பல செய்பவனாகவும் இருந்தான். சுனில் டேவிட்டிடம் "கணிதபாட ஆசிரியர் உன்னை உடனடியாக பாடசாலைக்கு வந்து தன்னைச் சந்திக்கச் சொன்னார். ஏதோ அவசரமாம்" என்றான்.

இதைக் கேட்ட டேவிட் எதற்காக கணிதபாட ஆசிரியர் என்னை வரச்சொன்னார், என்ற ஏக்கத்துடன் பாடப்புத்தகத்தை மூடி வைத்துவிட்டு உடனடியாக பாடசாலைக்கு ஓடிச்சென்றான். கணிதபாட ஆசிரியர் மீது அவனுக்கு அலாதிப்பிரியம். அவர் கணித பாடத்தை விளங்கப்படுத்தும் போது அவை டேவிட்டுக்கு மிகவும் நன்றாக புரிந்துவிடும். டேவிட் பாடசாலைக்குச் சென்று கணித ஆசிரியரைத் தேட ஆரம்பித்தான். தன்னுடைய வகுப்பறைக்குச் சென்று பார்த்தான், அங்கே அவர் இல்லை, பக்கத்து வகுப்பறைகளை எட்டிப்பார்த்தான் அங்கும் இல்லை, சிலவேளை அலுவலகத்தில் இருப்பார் என்று அங்கு சென்று பார்த்த போது அலுவலகமும் பூட்டப்பட்டிருந்தது. விடுமுறை நாள் என்றபடியால் அங்கே ஆசிரியர் இருக்கவில்லை. எனவே ஏமாற்றத்தோடு தான் சுனிலினால் ஏமாற்றப்பட்டுவிட்டேன் என்ற கவலையோடு வீடு திரும்பினான். டேவிட் அவ்வாறு வீடு திரும்பும் வழியில் சுனிலைக் கண்டான். டேவிட் ஏமாற்றத்தோடு திரும்பி வருவதைப் பார்த்த சுனில் அவனைப் பார்த்துக் கேலியாகச் சத்தமிட்டுச் சிரித்தான். அந் நேரத்தில் அந்தச் சிரிப்பு டேவிட்டுக்கு மிகுந்த ஆத்திரத்தையும் கோபத்தையும் மூட்டியது. ஆனாலும் சிரமப்பட்டு அவற்றை அடக்கிக் கொண்டான். நாட்கள் சென்றன.

ஒரு நாள் பாடசாலையில் விளையாட்டு நேரம். டேவிட் விளையாட்டு மைதானத்தில் இருந்தான். அப்போது ஏதோ ஒரு விடயமாக வகுப்பறைக்குள் சுனில் நுழைந்தான். அப்போது வகுப்பினுள் இருந்து சில விடைத்தாள்களைத் திருத்தம் செய்து கொண்டிருந்த கணித ஆசிரியர் சுனிலை அழைத்து டேவிட்டைக் கூட்டி வருமாறு கூறினார். உடனே சுனில் விடயத்தை டேவிட்டிடம் தெரிவித்தான். இதைக் கேட்ட டேவிட், ஏற்கனவே ஒரு நாள் தான் சுனிலினால் ஏமாற்றப்பட்டதை நினைத்து "நான் நம்பமாட்டேன், நீ விளையாட்டுக்காக என்னை ஏமாற்றுவதற்கு கூறுகின்றாய், போனதடவையும் நீ என்னிடம் பொய் தானே கூறினாய். நான் வரமாட்டேன்" எனக்கூறிவிட்டு விளையாட்டைத் தொடர்ந்தான். இப்போது சுனிலுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. எப்படி டேவிட்டை வகுப்பிற்கு கூட்டிச் செல்வது என்று யோசித்தான். சுனில் எவ்வளவோ வற்புறுத்திக் கூறியும் டேவிட் வகுப்புக்குவர சம்மதிக்கவில்லை. வேறுவழியின்றி சுனில் கணிதபாட ஆசிரியரிடம் சென்று டேவிட் வர மறுத்தமை பற்றிக் கூறினான். கணித ஆசிரியருக்கு பெரும் வியப்பாக இருந்தது. பெரியோரை மதிக்கும் பண்புகளும், அடக்கமும் கொண்ட டேவிட் வரமறுத்தமைக் கான காரணத்தை அறிய ஆசிரியர் ஆவலானார். விளையாட்டு நேரம் முடிந்து வகுப்பறைக்குத் திரும்பிய டேவிட்டை ஆசிரியர் அழைத்து தான் அழைத்த போது அவன் வராமைக்கான காரணத்தை வினவினார். அப்போது தான் சுனிலால் ஏற்கனவே விடுமுறை நாளொன்றில் ஏமாற்றப்பட்டதையும் அது போல் இன்றும் அப்படித்தான் ஏமாற்றுவதற்காகவே கூறினான் என்று தான் நினைத்ததாகவும் டேவிட் பயந்தபடி கூறி தான் வராமைக்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டான்.

ஆசிரியர் உடனடியாக சுனிலை அழைத்து நடந்தவைகள் பற்றி விசாரித்தார். சுனிலும் உண்மையைக் கூற வேண்டியதாயிற்று. ஆசிரியர் **"நீ ஒரு முறை பொய் சொன்னாலே போதும் பின்பு நீ எத்தனை தடவை உண்மை சொன்னாலும் உன்னை எவருமே நம்பமாட்டார்கள். ஆகவே இனிமேலாகிலும் விளையாட்டுக்கு என்றாலும் பொய் பேசுவதை நிறுத்திக் கொள்"** என்று கண்டிப்புடன் கூறினார்.

ஆம் பிரியமான நண்பர்களே! பிறந்திருக்கும் இப் புதிய ஆண்டில் மிகவும் மகிழ்ச்சியோடும் குதூகலத்தோடும் புதிய உற்சாகத்தோடும் இருப்பீர்கள். ஆனாலும் மிகவும் முக்கியமான காரியம் பிறந்திருக்கும் இவ் ஆண்டில் நீங்கள் விளையாட்டுக்காக சொல்லும் ஒரு பொய் மட்டுமல்ல, விளையாட்டாக செய்யும் அனைத்து காரியங்களும் ஒரு நாள் உங்களுக்கே துன்பத்தைக் கொண்டு வரும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ஒரு தடவை செய்தாலும் அதன் வடு உங்களைவிட்டு நீங்காது. எனவே பிறந்திருக்கும் இப் புதிய ஆண்டில் ஒவ்வொரு நாளும் கவனமாக உங்கள் வாழ்க்கையைக் காத்துக் கொள்ளுங்கள். **எபேசியர் 4:25 அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்.**





❒ போதகர் வேதநாயகம் சுமணன்

# ஜான் வெஸ்லி
# The life & Ministry of John Wesley

"சென்ற இதழின் தொடர்ச்சி...."




## ஜார்ஜியாவுக்கு மிஷனெரியாக செல்லுதல்



'நற்செய்தி பரப்பும் சங்கம்' *(Society for the Propagation of the Gospal)* என்னும் அமைப்பிற்கு ஆக்ஸ் போர்டில் உள்ள கார்ப்பஸ் கிறிஸ்டி கல்லூரியில் பணியாற்றி வந்த டாக்டர் ஜாண் பர்டன் அவர்கள் அதிகமான பொருளுதவி அளித்துவந்தார். ஜார்ஜியா டிரஸ்ட் என்னும் அமைப்பின் உறுப்பினராக இருந்த அவர் வெஸ்லியின் குடும்ப நண்பராவார்.

1735 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8ஆம் தேதியன்று 'கவர்னர் ஜேம்ஸ் ஒலித்ரோபின் பாதிரியாராக, அமெரிக்காவிலிருந்த ஜார்ஜியாவிற்குச் செல்கிறாயா?' என்று கேட்டு அவர் ஜாண் வெஸ்லிக்குக் கடிதமெழுதினார்.

ஜார்ஜியாவிற்கு முதலில் நியமிக்கப்பட்டிருந்த பாதிரியார் மரணமடைந்துவிட்டார். அவருக்குப் பதிலாக நியமிக்கப்பட்டிருந்த பாதிரியாரும் நோய் வாய்ப்பட்டிருந்ததால், கமிட்டியினர் ஜாண் வெஸ்லியை அனுப்புவதென்று தீர்மானம் செய்தனர். ஜார்ஜியாவில் முன்னாள் குற்றவாளிகள் பலர் குடியமர்த்தப்பட்டிருந்ததால், இந்த அழைப்பை ஹோலி கிளப்பைச் சேர்ந்தவர்கள் மிகவும் விரும்பினார்கள். மேலும், ஆக்ஸ்போர்டு குழுவைச் சேர்ந்த

மற்றவர்களும் அவருடன் செல்லலாம் என்று கமிட்டியினர் கூறியிருந்தனர். அதன்படி மூன்று பேர்: பெஞ்சமின் இங்ஹாம், சார்லஸ் டெல்மோட், ஜானின் சகோதரர் சார்லஸ் ஆகிய மூவரும் உடன் சென்றனர்.

இந்தக் குழுவை ஜாண் வெஸ்லி ஜார்ஜியாவிற்குத் தலைமை தாங்கி அழைத்துச் சென்றதன் நோக்கம் என்ன? 'தன்னுடைய ஆவிக்குரிய நிலைமையைச் சீர்படுத்துவதற்காகவே' என்று ஜாண் வெஸ்லி வெளிப்படையாகவே கூறியுள்ளார். 'மற்ற பல நோக்கங்கள் இருந்த போதிலும் என்னுடைய ஆத்தும மீட்பே நான் ஜார்ஜியா செல்வதற்கான முதல் நோக்கமாக உள்ளது' என்று ஜாண் வெஸ்லி, பர்டன் அவர்களிடம் கூறினார். மேலும் மற்றவர்களைப் போல, செவ்விந்தியர்களைப் பற்றிய பொதுவான அபிப்பிராயத்தையே அவர் கொண்டிருந்தார். மக்கள் அவர்களைக் காண்டுமிராண்டிகள் என்று கருதினார்கள். இதைக் குறித்து வெஸ்லி குறிப்பிடும் போது:

'புற இன மக்களுக்கு இயேசுவைப் பற்றிப் பிரசங்கம் செய்வதின் மூலமாக, கிறிஸ்துவின் சுவிசேஷத்திலுள்ள உண்மையை அறிய விரும்புகிறேன். அவர்களால் சத்தியத்தைப் புறக்கணிக்க முடியாது; எந்த வீணான தத்துவமும் அதை அழிக்க முடியாது; அங்கு ஆடம்பரமும், காமமும், பொறாமையும், பேராசையும் உள்ள மக்கள் மத்தியில் சத்தியத்தை மாற்றி, விசுவாசத்திற்குப் பதிலாக உலக சிற்றின்பத்தையும் கிறிஸ்துவுக்குப் பதிலாக உலக ஆவியையும் புகுத்த முடியாது. அவர்களுக்குக் கட்சிகள் இல்லை, வேறு காரியங்களில் நாட்டமில்லை. எனவே அவர்கள் சத்தியத்தை அதின் எளிமையான தன்மையில் ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் சிறு பிள்ளைகளைப் போன்று, தாழ்மையோடும், கற்றுக்கொள்ளும் ஆர்வத்துடனும், தேவனுடைய சித்தத்தைச் செய்ய விருப்பமுள்ளவர்களுமாய் இருக்கிறார்கள்; மேலும் நான் போதிக்கும் எல்லா உபதேசங்களும் தேவனுடையவைகள் என்பதையும் அவர்கள் அறிந்து கொள்வார்கள். எனவே இதன் மூலமாக, பரிசுத்தவான்களுக்கு ஒருமுறை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தின் பரிசுத்தத்தை அறிந்து கொள்வேன்; உலக காரியங்களை நாடும் எவரும் தேவனுடைய பிரமாணங்களின் உண்மையான கருத்தையும் விசாலத்தையும் புரிந்து கொள்ள முடியாது' என்று கூறினார்.

1735ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14ஆம் திகதியன்று ஆக்ஸ்போர்டைச் சேர்ந்த இந்த நால்வரும் 'சிம்மண்ட்ஸ்' என்னும் கப்பலில் ஏறி அமெரிக்காவிற்குச் சென்றனர். இது ஒரு உல்லாசமான பயணம் அல்ல. 250 டன் எடையுள்ள கப்பலில் எட்டு வாரங்கள் பயணம் செய்வது மிகவும் அபாயகரமானதாகும். கப்பலில் இருந்த கிறிஸ்தவர்களை வெஸ்லி ஒருங்கிணைத்ததுடன் அவர்கள் மூலமாக அவிசுவாசிகளுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கவும் முயன்றார். தியானக்கூட்டங்கள், தினசரி ஜெபம், முறையான பிரசங்கங்கள் ஆகியவை அந்தப் பயணத்தின் வழக்கமாய் அமைந்தன. இந்தவிதமான வாஞ்சையும் அர்ப்பணிப்பும் உடையவராக அமெரிக்காவிற்கு மிஷனெரியாகச் சென்ற போதிலும், வெஸ்லி மன அமைதியற்றவராகவே காணப்பட்டார்.

"வெஸ்லி இறையியலில் ஒரு தனித்து விடப்பட்ட நபராகவே இருந்தார். அவர் இன்னும் தன்னைத் தானே சரிப்படுத்திக் கொள்ளவில்லை, அல்லது அவருடைய வாழ்வைச் சரிப்படுத்தும்படி தேவனிடம் சொல்லவும் இல்லை. குழப்பம் நிறைந்த மனிதராக அவர்

இருந்தார். ஜார்ஜியாவில் தன் வாழ்க்கைக்கு வேண்டிய அற்புதம் நடக்கும் என்று அவர் எதிர்பார்த்தார். எவ்விதமாக யோனா தனது சொந்த முயற்சியினால் பல மைல்தூரம் பிரயாணம் செய்த போதும் தேவனைவிட்டுத் தூரமாகச் செல்ல முடியவில்லையோ அதைப் போன்றே ஜாண் வெஸ்லியும் சொந்த முயற்சியைக் கொண்டு தேவனை நெருங்கி வரமுடியாமல் திகைத்தார். டாக்டர் நட்டிங்ஹாம் கூறியதைப் போல, வெஸ்லி ஜார்ஜியாவிற்குச் சென்ற போது "அவர் ஒரு ஊனமுற்ற மனிதராகக் காணப்பட்டார்" என்று 'ஸ்கெவிங்டன் வுட்' என்பவர் எழுதியுள்ளார்.

1736ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5ஆம் திகதியன்று கப்பல் 'சவான்னா' துறை முகத்தை அடைந்தது. ஜார்ஜியா அப்போது ஒரு புதிய குடியிருப்பாகவே இருந்தது. வாழ்க்கை கடிமானக இருந்ததுடன் அதிக வெப்பமும் ஈரப்பதமும் காணப்பட்டது. சவான்னாவில் உள்ள திருச்சபையை நடத்தும் பொறுப்பை ஜாண் வெஸ்லி ஏற்றுக்கொண்ட போதிலும் அங்குள்ள செவ்விந்தியர்களின் மத்தியில் ஒரு மிஷனெரியாகவே அவர் அனுப்பப்பட்டிருந்தார். ஒரு ஆற்றின் கரையில் இருந்த அந்தக் குடியிருப்பில் அப்போது 500 பேர் தான் வாழ்ந்து வந்தனர். அவர் வீடுகளைச் சந்தித்து அம் மக்களுக்குப் போதனை செய்து வந்தார். விரைவிலேயே பழங்குடி மக்களான செவ்விந்தியர்களிடமும் அவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. அவர்களுடைய தலைவராகிய ஒருவர் முன்பு பிரிட்டனுக்கு அனுப்பப்பட்டிருந்தார். அதன் மூலம் அம் மக்களைச் சந்திக்கும் வாய்ப்பு வெஸ்லிக்கு ஏற்பட்டது. அதின் மூலமாக அவர்களைப் பற்றி அவர் கொண்டிருந்த எண்ணங்களை மாற்றிக் கொள்ள வேண்டியதாயிற்று.

விரைவிலேயே ஊழியத்தில் குழப்பங்கள் ஏற்பட்டன. ஜாணின் உயர்ந்த திருச்சபைப் பழக்கவழக்கங்கள் குடியிருப்பினர்களுடைய பழக்கங்களுடன் மாறுபட்டதாய் இருந்தன. மேலும் சார்லஸ் 'பிரெடெரிக்கா' என்னுமிடத்தில் ஊழியம் செய்யும்படி சென்றார். அங்கிருந்த இரண்டு பெண்கள் தங்களுடன் 'ஒலித்ரோப்' தொடர்பு கொண்டிருந்ததாகத் தெரிவித்தனர். அதன் காரணமாக கவர்னர் ஒலித்ரோப்பிடம் சார்லசுக்கு விரோதம் ஏற்பட்டது. ஜாண் நூறு மைல் தூரம் பிரயாணம் செய்து பிரெடெரிக்கா சென்று சார்லசைச் சந்தித்தார். ஒலித்ரோப்பைச் சந்தித்து சார்லஸ் அவருக்கு எதிர் அல்ல என்பதை எடுத்துக் கூறினார். அப்போதைக்கு பிரச்சினை இல்லை என்ற போதிலும் மறுபடியும் பிரச்சினைகள் ஏற்பட்டன.

ஜாணும் சார்லசும் சில காலத்திற்கு ஒருவருக்கொருவர் இடம் மாறி ஊழியம் செய்தனர். பிரெடரிக்காவில் ஜாண் இருந்த போது திருமதி. ஹாக்கின்ஸ் என்பவர் முதலில் அவரைக் கொல்ல முயன்றாள். பிறகு தன்னுடன் உடலுறவு கொள்ளும்படி கட்டாயப் படுத்தினாள். மேலும் அவர் ஒரு படுக்கையில் படுத்துக்கொண்டு உன்னை அடையாவிட்டால் உன் உயிரைக் குடித்துவிடுவேன் என்றும் மிரட்டினாள். ஜாண் இச் சோதனையில் தப்பினார். நவீன காலத் திரைப்படங்களில் வருவதைப் போன்று இச் சம்பவத்தை ஜாண் தனது குறிப்பேட்டில் எழுதியுள்ளார்.

விரைவிலேயே சார்லசுக்கு ஜார்ஜியாவில் தங்கியிருக்கப்பிடிக்கவில்லை. எனவே தன் வேலையை விட்டுவிட்டு ஆகஸ்டு 16ஆம் தேதியன்று பிரிட்டனுக்குப் பயணமானார். அவர் சென்ற கப்பல் கடலில் திசைமாறிப் போனது என்றாலும் ஒரு மாத காலம் தாமதமாக அவர் தாயகம் திரும்பினார். ஜாண் சவான்னாவில் ஊழியம் செய்த போதிலும் பிரெடெரிக்காவிற்குத்

திரும்பிச் செல்ல விரும்பினார். பிறகு அவர் சாவன்னாவின் பொறுப்பை இங்ஹாமிடம் கொடுத்துவிட்டுத் திரும்பினார்.

இதற்குள்ளாகவே ஜாண் வெஸ்லி மிகவும் சோர்வடைந்துவிட்டார். அவர் ஜார்ஜியாவிற்கு வந்த நோக்கம் தோல்வி அடைந்தது.

செவ்விந்தியர்கள் பெருந்தீனிக்காரராகவும், குடிகாரர்களாகவும், திருடர்களாகவும், பொய்யராயும், சமாதானப்படுத்த முடியாதவர்களாயும், இரக்கமற்றவர்களாயும், தாய் தகப்பன்மாரைக் கொலை செய்பவர்களாயும் இருந்தனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது.

மக்களின் அகோரமான மனநிலையை அனுபவத்தில் கண்ட பின்னர், "இயற்கையான மனிதத்தன்மை அழிந்து விட்டதே!" என்று வெஸ்லி ஆச்சரியமடைந்தார். செவ்விந்தியர்களிடம் கொண்டிருந்த ஈடுபாட்டினைப் போன்றே வெஸ்லி, ஜெர்மனியிலிருந்து குடிபெயர்ந்து ஜார்ஜியாவில் குடியிருந்த மக்களின் எளிமையான வாழ்க்கையாலும், விசுவாசத்தினாலும் கவர்ந்து இழுக்கப்பட்டார். இந்த மக்கள் பொஹேமியாவிலிருந்து வந்த ஜெர்மனியைச் சேர்ந்த பாதிரியாரான 'கவுன்ட் நிக்கொலாஸ்' என்பவரின் பண்ணையில் தஞ்சமடைந்திருந்தனர். 'நிக்கொலாஸ்' மொரோவிய குழுவினரை ஒருங்கிணைத்து கிரீன்லாந்து, தென் அமெரிக்கா, ஆப்ரிக்கா, கிழக்கிந்திய தீவுகள் போன்ற இடங்களுக்கு மிஷனெரி ஊழியர்களை அனுப்பி வந்தார். 'சிம்மண்ட்ஸ்' கப்பலில் பயணம் செய்யும் போதே வெஸ்லி இவர்கள்பால் கவரப்பட்டார். அவர்கள் கடுமையான புயலுக்கும் அஞ்சாமல் இருந்ததைக் கண்டு வெஸ்லி மிகவும் ஆச்சரியப்பட்டார். அவர்களோடு அதிக நேரம் உரையாடல் செய்து அவர்களுடைய சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் மிகவும் பாராட்டினார். நற்கிரியைகளைச் செய்வதாலோ பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவதினாலோ ஒரு மனிதன் இரட்சிக்கப்பட முடியாது. விசுவாசத்தால் மட்டுமே இரட்சிக்கப்பட முடியும் என்று அவர்கள் கூறினார்கள். ஜார்ஜியாவில் தான் தங்கியிருந்த இரண்டு ஆண்டுகளின் போதும், வெஸ்லி இவர்களுடைய ஆலோசனைகளைக் கேட்டு நடந்து வந்தார். அவர்களுடைய தலைவர் ஒருவர் சொந்த நாட்டிற்குத் திரும்புவதற்கு முன்பாக அவருடன் தான் நடத்திய இறையியல் பற்றிய உரையாடல்களை வெஸ்லி தன் நாட்குறிப்பில் எழுதி வைத்துள்ளார்.

ஜார்ஜியாவில் அவருடைய வேலை முடிந்துவிட்டது. செவ்விந்தியர்கள் மத்தியில் நடக்கும் ஊழியத்தில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

1737ஆம் ஆண்டு டிசம்பர் இரண்டாம் திகதியன்று அவர் சவான்னா துறைமுகத்திலிருந்து தன் பயணத்தை தொடங்கினார். அமெரிக்காவில் அவர் 22 மாதங்கள் தங்கியிருந்தார். 'நான் தொடர்ந்து சுயநீதியினால் மனிதர்கள் எவரும் இரட்சிக்கப்பட முடியாதென்று பிரசங்கம் செய்தேன். சவான்னாவில் இருந்த போது திரும்பத்திரும்ப இதையே பிரசங்கம் செய்து வந்தேன்' என்று தன் நாட்குறிப்பில் அவர் எழுதியுள்ளார்.

1738ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் வெஸ்லி இங்கிலாந்திற்குத் திரும்பிய பிறகு, அவருடைய வாழ்வில் ஒரு திருப்புமுனையை அவர் சந்திக்க நேர்ந்தது. அவர் ஒரு ஊழியராகவும் மிஷனெரியாகவும் இருந்த போதிலும் இன்னும் அவர் இயேசு கிறிஸ்துவில்

சரியான விசுவாசம் உள்ளவராக மாறவில்லை. 'இந்த நாட்களிளெல்லாம் என்னுடைய சொந்த முயற்சிகளையே நான் நம்பியிருந்தேன்' என்று அவர் பின்பு குறிப்பிடுகிறார். ஆனால் அந்த ஆண்டின் முடிவுக்குள்ளாகவே விரக்தியோடிருந்த இந்த ஜார்ஜியாவின் மிஷனெரி இங்கிலாந்து நாடு முழுமைக்கும் ஒரு தீவிரமான சுவிசேஷகராக மாற்றமடைந்தார். ஜான் வெஸ்லியையும் இரட்சிக்கும்படியாகத் தேவனுடைய கிருபை பெருகிற்று.

## மனமாற்றம்

அப்போஸ்தலர் பவுலின் மனமாற்றத்தைத் தவிர வேறு எவருடைய மனமாற்றத்தைப் பற்றியும் வெஸ்லியைக் குறித்து எழுதப்பட்ட அளவிற்கு எழுதப்படவில்லை என்றே கூறலாம். வெஸ்லியை இரட்சிப்பிற்குள் கொண்டு வருவதற்கான தேவனுடைய அநாதி திட்டத்தின் செயல்பாட்டினைச் சற்று விரிவாக ஆராய்தல் நமக்க மிகுந்த பலனளிப்பதாய் அமையும்.

'தேவனுடைய வழிகள் மனிதனுடைய வழிகளைப் போன்றவை அல்ல' என்று ஜே.சி.ரெயில் என்பவர் கூறினார். செசரியாவின் சிறையில் பவுல் இருந்ததைப் போன்றும், காசாவிற்குச் செல்லும் வனாந்தர வழியில் பிலிப்பு சென்றதைப் போன்றும் வெஸ்லி இரண்டு ஆண்டு காலத்தை அமெரிக்காவில் கழிக்க வேண்டியிருந்தது. ஜார்ஜியாவில் இருந்த போத வெஸ்லி பல காரியங்களைக் கற்றறிந்தார். முதலாவதாக அவர் தன் சுய முயற்சியின் மீது நம்பிக்கையை இழந்தார். இரண்டாவதாக மொரேவிய குழுவினரிடமிருந்து ஒருவன் தன்னுடைய இரட்சிப்பைப் பற்றிய உறுதியுள்ளவனாக இருக்க முடியும் என்பதைக் கற்றுக் கொண்டார். 'இதன் விளைவாக அவர் 1738 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் தேதியன்று ஞானமுள்ளவராகவும் காணப்பட்டார். சுருங்கக்கூறின் அவர் பரிசுத்த ஆவியின் உள்ளான கிரியை அனுபவித்தார்' என்று ஜே.சி.ரெயில் மேலும் குறிப்பிடுகிறார்.

தொடரும்.....






❐ ரேமா

**அவர் இங்கே இல்லை; அவர் உயிர்த்தெழுந்தார் - லூக்கா 24:6**

இன்று மூன்று நாள் ஆகிறது என்று கலக்கமுற்று எருசலேமிலிருந்து எம்மாவூருக்குப் போனவர்கள் வழியில் தங்களுடன் இயேசு கூட வருகிறார் என்பதை அறியாமல் அவரையே, நீர் அந்நியராய் இருக்கிறீரோ, நசரேயனாகிய இயேசுவுக்கு நடந்தவைகளையும் அவர் சொன்னவைகளையும் அறியவில்லையா? அவர் சொன்னார்; **நான் மரித்து மூன்றாம் நாள் எழுந்திருப்பேன் என்பதாக. அவரே நம்மை இரட்சிப்பார் என்று நம்பியிருந்தோம், வாக்கிலும் செய்கையிலும் வல்லமையுள்ளவராய் இருந்தார் என்றார்கள்.**

இயேசுவோ அவர்களுக்கு வேத வாக்கியங்களை விளக்கிக் காண்பித்த போதிலும் விசுவாசிக்க முடியாதவர்களாய் காணப்பட்டனர்.

இதை வாசிக்கும் அருமை நண்பரே அவர் உண்மையுள்ளவராய் இருக்கிறார். பொய் சொல்ல அவர் ஒரு மனிதனல்ல. துக்கமுள்ளவர்களாய் நீங்கள் நடந்து போக வேண்டியது என்ன?

இப் புதிய ஆண்டிலும் ஒவ்வொரு நாட்களிலும் அவர் (இயேசு) உன்னோடு கூட வருவதற்கு ஆயத்தமுள்ளவராய் இருக்கிறார். விசுவாசிப்பாயா? அவரை. உன் கண்கள் திறக்கப்பட, அவரைப் பார்க்க வேண்டும். அவர் வசனம் கேட்க ஆசைப்படுவாயா?

*உன்னோடு வருகிறவர்*

*உனக்காக யாவையும் செய்வார்.*



# உன்னை விசாரிக்கிறவர் ஒருவர் உனக்கு உண்டு!

❒ திருமதி. J.பிலிப்




கர்த்தருடைய பெரிதான கிருபையினால் 2018ஆம் ஆண்டை நாம் கடந்துவிட்டோம். 2019ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைத்திருக்கும் அருமையான சகோதரிகளே! அன்பின் புதுவருட வாழ்த்துக்களை அனல் சஞ்சிகையின் பெண்கள் பக்கம் மிக்க மகிழ்ச்சியுடன் உங்களுக்குத் தெரிவிக்கிறது.

**இவ்வளவு நாட்களும் என்னை விசாரிக்க ஒருவர் இல்லையே! இனியா வரப்போகிறார் என்று சிந்திக்கிறாயா? ஜெப சிந்தையோடு நீ இதை வாசித்தால் அவரை நிச்சயம், நிச்சயம் கண்டு கொள்வாய்.**

ஒரு கிராமத்தில் தேவனுக்குப் பயப் படும் ஒரு குடும்பம் மிகவும் பயபக்தியாய் வாழ்ந்து வந்தார்கள். அக் குடும்பத்தில் ஒரே ஒரு பெண் பிள்ளை மட்டும் அவர் களுக்கு இருந்தாள். பெற்றோர் அந்தப் பிள்ளையை சிறுவயதில் இருந்து தேவனை எல்லாக் காரியங்களிலும் பிரியப்படுத்தி வாழவேண்டும் என்று கற்றுக் கொடுத்து வந்தார்கள். பிள்ளையும் நன்றாகப் படித்து, பல்கலைக்கழகம் செல்ல வேண்டிய நேரம் வந்தது. அவ் வருடத்திலே அப் பிள்ளையின் பிறந்த நாளும் வந்தது. எனவே பிள்ளையின் தகப்பன் யோசித்தார், இவ் வருடம் பிள்ளைக்கு என்ன பரிசு கொடுக்கலாம்? பல்கலைக் கழக வாழ்க்கையை பிள்ளை வெற்றிகரமாக முடிக்க வேண்டும், அது மட்டுமல்ல கிறிஸ்தவ பிள்ளை என்ற சாட்சியை அவள் காத்துக் கொள்ள வேண்டும் என்று. நாட்கள் செல்ல பிள்ளை யின் பிறந்த நாளும் வந்தது.

தகப்பன் என்ன செய்தார் தெரியுமா? அழகான இரண்டு பெட்டி களை பிள்ளையிடம்

கொடுத்தார். ஒன்று கறுப்பு நிறம், மற்றையது வெள்ளை நிறம். இரண்டையும் பிள்ளையிடம் கொடுத்து, மகளே கவலைகள் உன்னை வாட்டும் போது அந்தக் கவலைகளை ஒரு தாளில் எழுதி அதனை கறுப்புப் பெட்டிக்குள் போட்டுவிடு, அவ்வாறே சந்தோஷப்படும் நேரங்களில் அந்த சந்தோஷங்களை எழுதி வெள்ளைப் பெட்டிக்குள் போட்டுவிடு என்று இரண்டு பெட்டிகளையும் மகளிடம் கொடுத்தார். மிக்க மகிழ்ச்சியுடன் மகளும் பெட்டியை வாங்கி, தகப்பனார் சொன்னபடியே செய்து வந்தாள்.

இவ்வாறு நாட்கள் சென்று கொண்டிருக்கும் போது, ஒரு நாள் மகளுக்கு ஒரு ஆசை வந்தது. எந்தப் பெட்டிக்குள் அதிகம் எழுதிப்போடப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டுமே என்ற ஆவலோடு கறுப்பு பெட்டியை திறந்து பார்த்தாள். பார்த்தவள் மிகுந்த ஆச்சரியப்பட்டாள். காரணம் கறுப்பு பெட்டிக்குள் அவள் எழுதிப்போட்ட எவையும் காணப்படவில்லை. நடந்தது என்னதெரியுமா? கறுப்பு பெட்டியின் அடியில் ஒரு சிறு துவாரம் காணப்பட்டது. மகள் கவலைகளைக் குறித்து அந்தப் பெட்டிக்குள் போடும் குறிப்புக்களை அன்பு தகப்பன் எடுத்துப் பார்ப்பார். அதைப் பார்த்து, மகளை வாட்டும் கவலை என்ன என்பதை அறிந்து, அதற்கேற்ப மகளுக்கு ஆலோசனை கொடுத்து அவளை சந்தோஷப்படுத்துவார்.

இதை வாசிக்கும் சகோதரியே, **எனக்கும் ஒரு அன்பு தகப்பன் இருந்து விசாரித்து நடத்தினால் நான் எவ்வளவு சந்தோஷமாய் வாழலாம் என்று யோசிக்கிறாயா?** திகையாதே, **"உன்னை விசாரிக்க ஒருவர் உனக்கு உண்டு".** அவர் தான் உன்னைத் தேடி வந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. அவர் உன்னை விசாரிக்க ஆயத்தமாய் இருக்கிறார். நீ உன்னுடைய வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளையும் அவருக்கு ஒப்புக்கொடுக்க ஆயத்தமா? அல்லது இதை வாசிக்கும் நாளில் நீ ஆயத்தப்படு. **அவர் உங்களை விசாரிக்கிறவராக இருக்கிறபடியால் கவலைகளை எல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள் - 1பேதுரு 5:6**

இயேசுவுக்கு அன்பாய் இருந்த குடும்பம் தான் மார்த்தாள், மரியாள், லாசரு. இந்தக் குடும்பத்தில் ஒரு பெரிய துக்கம் ஏற்பட்டது. அவர்களின் சகோதரனாகிய லாசரு வியாதிப்பட்டு மரித்து அவனை அடக்கம்பண்ணிவிட்டார்கள். அவனை அடக்கம் செய்து நான்கு நாட்களுக்குப் பிற்பாடு போதகர் வந்திருக்கிறார் உன்னை அழைக்கிறார் என்று சகோதரி கூறியதும், சீக்கிரமாய் எழுந்தாள் மரியாள். இயேசுவிடம் வந்தாள், அவர் பாதத்தில் விழுந்து, **"ஆண்டவரே நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரித்திருக்கமாட்டான்"** என்று தன் கவலையை அவரிடம் கூறி அழுதாள். **"அவனை எங்கே வைத்தீர்கள்?"** என்று அவளை கவலைப்படுத்தும் காரியத்தைக் குறித்து விசாரித்தார். **உடனே அவள் கூறிய அந்த இடத்திற்கு சென்றார். மரித்த லாசருவை உயிருடன் எழுப்பினார்.** மரியாளின் கவலை சந்தோஷமாக்கப்பட்ட காரணத்தை யோசிக்கிறாயா? அன்று ஒரு நாள் இயேசு மரியாள் வீட்டிற்கு வந்த போது அவருடைய

பாதத்தில் இருந்து அவருடைய வசனத்தைக் கேட்டு, **"தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்காகிய இயேசுவின் வசனத்தைத் தெரிந்து கொண்டபடியினால் அவ் வசனமே அவளை வாட்டிய கவலையை விசாரித்து, சந்தோஷமாக மாற்றியது."**

**"உன்னை விசாரிக்க ஒருவர் உண்டு என்பதை மறந்து போகாதே".** மரியாள் இயேசுவின் வசனத்தைக் கேட்டாள். நீயும் இவ் வருடம் அதிக நேரம் அவருடைய வசனத்தை வாசித்து, தியானித்து அதன்படி நீ நடக்கும் போது கவலை உன்னை வாட்டினால் அவருடைய வசனம் உன்னை விசாரித்து உன் கவலையை சந்தோஷமாக மாற்ற வல்லமையுள்ளது. பூமிக்குரிய தகப்பன் தன் மகளை விசாரிப்பாராக இருந்தால், பரமபிதா அதைப் பார்க்கிலும் மேலாக உன்னை விசாரித்து நடத்துவார் என்பதை மறந்து போகாதே. அவருடைய வசனமே உன் கால்களுக்குத் தீபமும், பாதைக்கு வெளிச்சமுமாய் இருக்கிறது. **நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையும் குறித்து, உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப் படுத்துங்கள் - பிலிப்பியர் 4:6**

# வினா விடை – 91

***01.*** *யாருடைய விளக்கு அணைந்துபோம்?*

***02.*** *"பரிசுத்தவான்களோடே உண்டையாயிருக்கிறவன்" யார்?*

***03.*** *"நீங்கள் சமாதானத்தோடே போங்கள்" என்று வெறும் வார்த்தையால் யார் யாரைப் பார்த்துச் சொல்லக்கூடாது?*

***04.*** *"என் மகத்தான நாமத்தை நான் பரிசுத்தம் பண்ணுவேன்" என்று சொல்லப்பட்டிருப்பது எங்கே?*

***05.*** *யாருக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை?*

***06.*** *"கர்த்தரின் வெளிச்சத்திலே நடப்போம் வாருங்கள்" என்று சொன்னது யார்?*

***07.*** *"நீ சமாதானத்தோடே நகரத்திற்கு திரும்பு" என்று யாருக்கு சொல்லப்பட்டது?*

***08.*** *"நீங்கள் கர்த்தருக்குப் பரிசுத்தமானவர்கள்" என்று சொன்னது யார்?*

***09.*** *"அவைகளில் நடக்கிற ஒருவனும் சமாதானத்தை அறியான்" என்றது யார்?*

***10.*** *"வெளிச்சம் அவரிடத்தில் தங்கும்" என்றது யார்?*

# மிக்கியும் முத்து மாலையும்



❑ ஜசிந்தா அக்கா




அழகான அடர்த்தியான உயர்ந்த மரத்தில் மிக்கி, ஷக்கி என்னும் இரண்டு காகங்கள் அழகிய கூடு ஒன்றைக் கட்டின. ஷக்கி அந்தக் கூட்டில் முட்டைகள் இட்டு அதன் மேல் உட்கார்ந்து அடைகாத்தது. மிக்கி வெளியே சென்று உணவு கொண்டு வந்து ஷக்கிக்குக் கொடுத்தது. இருவரும் சந்தோஷமாய் வாழ்ந்த கொண்டு இருந்தனர். ஷக்கி முட்டைகளைப் பாதுகாப்பதில் அக்கறையாக இருந்தது. ஆனால் ஒரு நாள் சற்று அயர்ந்து போனாள்.

மரத்தின் அருகே ஒரு புற்று இருந்தது. அந்தப் புற்றில் இருந்த பாம்பு மரத்தில் ஏறி வந்து முட்டைகளை சாப்பிட்டுவிட்டது. மிக்கியும் ஷக்கியும் மிகுந்த துக்கமடைந்தனர். செய்வது அறியாது திகைத்து நின்றனர். அப்பொழுது தங்களை உண்டாக்கின ஆண்டவரை நோக்கினர். **"தெய்வமே நாங்கள் பெலவீனர், இந்தப் பொல்லாத பாம்பு எங்களைவிடப் பலசாலி. நீரோ எல்லோரிலும் வல்லவர். இந்தப் பாம்பைக் கொல்ல எங்களுக்கு ஞானம் தாரும்"** என்று மிக்கி ஜெபித்தது. தேவன் ஜெபத்தைக் கேட்டு ஞானம் கொடுத்தார்.

சற்றுத் தொலைவில் அமைதியான ஒரு குளம் இருந்தது. வழமை போல் ராஜகுமாரத்தி தன் தோழிகளோடு நீராட அந்தக் குளத்திற்கு வந்தாள். தனது முத்துமாலையை கழற்றி குளத்திற்கு அருகில் வைத்துவிட்டு தனது தோழிகளோடு குளத்தில் இறங்குவதை அவதானித்துக் கொண்டிருந்த மிக்கிக் காகம் மின்னல் வேகமாய் பறந்து வந்து, முத்துமாலையைக் கொத்திக் கொண்டு போய் பாம்பு இருந்த புற்றில் போட்டது. இதைக் கண்ட தோழிகள் மிகுந்த சத்தமிட்டு வேலைக்காரரை அழைத்தனர். விரைந்து வந்த வேலைக்காரருக்கு நடந்த சம்பவத்தை விளக்கிச் சொன்னார்கள்.

வேலைக்காரர் பாம்பின் புற்று இருந்த இடத்தை நோக்கி விரைந்து சென்றனர். புற்றைத் தகர்த்தனர். அப்பொழுது சீறிக்கொண்டு வந்த பொல்லாத பாம்பை அடித்துக் கொன்றனர். தகர்த்த புற்றிலிருந்த முத்து மாலையை எடுத்துச் சென்றனர். ஷக்கியும் மிக்கியும் மிகுந்த சந்தோஷமடைந்தனர். ஞானம் தந்த தேவனுக்கு நன்றி என்று சொன்னார்கள்.

நமது தேவன் ஜெபத்தைக் கேட்கிறவரும் பதிலளிக்கிறவருமாய் இருக்கிறார். நீங்கள் பலவீனர் என்று சோர்ந்து போகவேண்டாம். உங்களுக்கு நேரிடும் தீமைகளையும் தீங்கு செய்ய நினைக்கும் பலசாலிகளையும் நீங்கள் ஜெயிக்கலாம். ஆகவே தினந்தோறும் உங்கள் ஜெபத்தில் ஞானம் தரும்படி தேவனிடத்தில் கேட்டு ஜெபியுங்கள். அவர் தரும் ஞானத்தைப் பெற்று ஜெயத்தோடே சமாதானமாய் கர்த்தருக்கென்று வாழுங்கள்.


**யாக்கோபு 1:5 உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்.**

---

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

"தாயை இழந்தவன் - ஓநாயைப் போன்றவன்
காலையில் புசிப்பவன் - மாலையில்
கொள்ளையடிப்பவன்
பின்பு கர்த்தருக்குப் பிரியமானவன்" - நான்
யார்?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*



அனல் 2018 கார்த்திகை - மார்கழி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:

**ஆகாப், யோராம், அகசியா இராஜாக்கள்.**
**யேசபேல், அத்தாலியாள் - தாயும் மகளும்**

(1இராஜா 21:25, 11இராஜா 8:17-18, 11நாளா 21:5-6, 11நாளா 22:1-3)

விடைகளை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.




# 2019 உலகில் மிகச் சிறந்த மீட்பு நடவடிக்கை

A.ஆசீர்வாதம்




உலகில் அவ்வப்போது பல மீட்பு நடவடிக்கைகளைக் குறித்து நாம் கேள்விப்படுகின்றோம். அதிசயிக்கத்தக்க வகையில் அவை பெரும்பாலும் அமைந்துவிடும். அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களை உலகமே வியந்து பாராட்டும். நாம் வாழும் நூற்றாண்டில் கூட அதிகமான மீட்பு நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன.



கடந்த 23 ஜூன் 2018இல் தாய்லாந்து நாட்டில் 13பேர் கொண்ட ஓர் உதைபந்தாட்டக் குழுவினர் 10கிலோ மீற்றர் நீளமுள்ள ஒரு குகையில் மாட்டிக் கொண்டு வெளியே வரமுடியாதபடி திடீரென பெய்த மழை வெள்ளத்தினால் சூழப்பட்டு அந்தரித்த வேளையில், உலகெங்கும் இருந்து வந்த நூற்றுக்கணக்கான சிறந்த நீச்சல் வீரர்கள் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் பல மணிநேரங்களுக்கு மேலாக நீந்திச் சென்று பதினான்கு நாட்களுக்கு பின்பு அத்தனை சிறுவர்களையும் மீட்ட செய்தியை நாம் நன்றாக அறிந்திருக்கின்றோம்.



அதேபோன்று 2018 மே மாதம் பிரான்ஸ் நாட்டிலும் நான்கு வயது குழந்தை ஒன்று அடுக்குமாடி

குடியிருப்பின் ஐந்தாவது மாடியில் இருந்து வெளியே வந்து தொங்கியபடி இருந்தது. பலரும் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கையில் அவ்வழியே வந்த மாலி நாட்டைச் சேர்ந்த இருபத்திரண்டே வயதான ஓர் இளைஞன் ஒரு நிமிடத்திற்கும் குறைவான நேரத்தில் மேலே தாவிச் சென்று அக் குழந்தையை மீட்ட செய்தியையும் நாம் அறிந்திருக்கிறோம்.



மேலும் 1976ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27ஆம் திகதி இஸ்ரேலில் இருந்து 246 பயணிகளுடன் பிரான்ஸ் தேசத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த விமானத்தை கிரேகத்தில் ஏதேன்ஸ் நகரத்தில் இருந்து மேலும் ஏறிய 58 பயணிகளில் நான்கு பேர் கொண்ட கடத்தல்காரர்கள் அவ் விமானத்தைக் கடத்திச் சென்று உகாண்டா தேசத்தில் தரையிறக்கி அவர்களை பணயக் கைதிகளாக வைத்திருந்தார்கள். சர்வாதிகாரியாகிய இடிஅமீன் இஸ்ரேல் நாட்டிடம் இருந்து ஐந்து மில்லியன் அமெரிக்க டொலர்களும் மற்றும் இஸ்ரேல் சிறைகளில் இருந்த பாலஸ்தீனத்தைச் சேர்ந்த 53 போராளிகளையும் விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தான். இக் கோரிக்கையை நிறைவேற்றாத பட்சத்தில் பணயக்கைதிகள் ஒவ்வொருவராக சுட்டுக் கொலை செய்யப்படுவார்கள் என்ற தகவலையும் தெரிவித்தான். குறுகிய காலப்பகுதி தான் கொடுக்கப்பட்டது. என்ன செய்வது என்றே தெரியாமல் உலக நாடுகளும் பதறிப்போய் இருந்தது. அவர்கள் கேட்டதைக் கொடுக்கும்படி இஸ்ரவேலை உலக நாடுகள் வற்புறுத்தின. ஆனால் யாரும் எதிர்பாராத வகையில் 4000 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள உகாண்டா நாட்டினுள் பிரவேசித்த இஸ்ரேலிய படைகள் யுத்தம் ஒன்றைச் செய்து ஜனங்களை மீட்டு வந்த செய்தி இன்றைக்கும் பெரிய மீட்பு நடவடிக்கையாக பார்க்கப்படுகின்றது.

வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டிலும் சில மீட்பு சம்பவங்கள் காணப்படுகிறது.

ஆதியாகமம் 14ஆம் அதிகாரத்தில் ஐந்து இராஜாக்கள் ஒன்றாய் இணைந்து மற்றுமொரு நான்கு இராஜாக்களைக் கொண்ட குழுவினரோடு யுத்தம் செய்யும் போது ஆபிரகாமின் சகோதரனின் மகன் லோத்து நான்கு இராஜக்கள் கொண்ட குழுவினரால் சிறைப்பிடித்துக் கொண்டு போகப்படுகிறான். அவன் மட்டுமன்றி, அவனது மனைவி, பிள்ளைகள், அவனது பொருட்கள், ஆடுமாடுகள் அனைத்தும் சிறைப்பிடிக்கப்பட்டது. ஆனால் இதனை கேள்விப்பட்ட ஆபிரகாம் தனது வீட்டில் உள்ள 318 ஆட்களுக்கு ஆயுதம் தரிப்பித்து இரவோடு இரவாக அந்த நான்கு

இராஜாக்களுடன் யுத்தம் செய்து எல்லாலோரையும் மீட்டுக் கொண்டு வந்தான்.

அடுத்து 1சாமுவேல் 30ஆம் அதிகாரத்தில் தாவீதும் அவனது குழுவினரும் (400 பேர்) மூன்று நாட்கள் பெலிஸ்தரின் தேசத்தில் இருந்த சமயம் அமலேக்கியர் தாவீதின் மனைவி மற்றும் அவனது குழுவினரின் மனைவிகள், பிள்ளைகள், அவர்களது உடைமைகள், சொத்துக்கள், ஆடு, மாடுகள் அனைத்தும் சிறைப்பிடித்துக் கொண்டு தமது தேசத்திற்கு கொண்டு சென்றார்கள். திரும்ப வந்த தாவீதின் படை தங்களுக்குரிய எதையும் காணாது பெலனில்லாமல் போகுமட்டும் அழுதார்கள். ஆனால் பின்னர் அந்தப் படையைப் பின்தொடர்ந்த தாவீதின் அணி அவர்களோடு யுத்தம் பண்ணி எல்லாவற்றையும் மீட்டுக் கொண்டு வந்தார்கள்.

ஆம் பிரியமானவர்களே, மேற்குறிப்பிட்ட இவ் ஐந்து சம்பவங்களும் வரலாற்றில் இடம்பெற்ற உண்மையான மீட்பு நடவடிக்கைகள். ஆனால் இன்னொரு மீட்பை உங்களுக்கு தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மேற்குறிப்பிட்ட மீட்பு நடவடிக்கைகள் ஓர் குழுவினரையோ அல்லது தனிப்பட்டவர்களையோ சார்ந்தது. ஆனால் தொடர்ந்து நீங்கள் வாசிக்கப் போவது **"உலக மானிடர் அனைவரையும் மீட்ட செய்தி"**. ஏன் இதை வாசிக்கும் நீங்கள் கூட அந்த மீட்பில் உள்ளடக்கப்பட்டுள்ளீர்கள் என்பதை ஒருவேளை நீங்கள் அறிந்திருக்கலாம் அல்லது அறியாமலும் இருக்கலாம். ஆனால் அது மிக மிக உண்மையான கூற்று.

**அந்த மீட்பர் தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து!!!**

கடவுளாகிய இவர் மனிதனாக மனுக்குலத்தை மீட்பதற்காக இந்தப் பூமியில் அவதரித்தார். அவர் பிறந்ததும் இந்தக் கொடிய உலகம் அவரது கதையை முடிக்க எண்ணியது. இரண்டு வயது குழந்தைகளை அவர் பிறந்த ஊரிலும் சற்று வெளியிலும் கொலை செய்ய உத்தரவிடப்பட்டது. ஆனால் அதில் அவரைக் கொலை செய்ய முடியவில்லை. **பின்னர் முப்பது வயதில் தான் இயேசு தனது மீட்பு நடவடிக்கைகளை ஆரம்பித்தார்.** ஆலயம் சென்ற இயேசுவுக்கு ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமம் வாசிக்கக் கொடுக்கப்பட்டது. அதில், **"கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார், தரித்திரருக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார். இருதயம் நருங்குண்டவர்களை குணமாக்கவும், <u>சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும்,</u> குருடருக்குப் பார்வையையும், <u>நொறுங்கண்டவர்களுக்கு விடுதலையையும்,</u> கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தை பிரசித்தப்படுத்தவும் என்னை அனுப்பினார்"** என்ற பகுதியை வாசித்து அது இன்று நிறைவேறியது என்றார்.

சற்று ஏளனத்துடன் இவரை ஓர் தச்சனின் மகனாக அறிந்த பலர் சிரித்தபடி பார்த்தனர். ஆனால் அதன் பிற்பாடு தான் அவர்களுக்கே அதன் உண்மை புரிந்தது. இப்படியே விட்டுவிட்டால் உலகமே இவருக்குப் பின்பாக போகும் என்பதை அறிந்த உயரதிகாரிகள் பொறாமைப்பட்டு மூன்றரை வருடத்திற்குள்ளேயே அவரைக் குற்றவாளியாக்கி, சிலுவையில் அறைந்து அவரது உதிரத்தை சிந்தப்பண்ணி, அவரின் உயிரை எடுத்தார்கள். ஆனால் அவர்களுக்குத் தெரியவில்லை இயேசுவின் அந்த இரத்தம்


உலக மக்களின் பாவத்தை நிவிர்த்தி செய்யப் போவதையும், கொடிய வியாதிகளை நீக்கப் போகிறது என்பதையும், பிசாசின் அடிமைத் தனத்தில் உள்ளவர்களை விடுதலையாக்கப் போகிறது என்பதையும், பரிசுத்த ஆவியோடு மனிதரை ஒப்புரவாக்கப் போகிறது என்பதையும், பரம்பரை சாபங்களை அகற்றி எறியப் போகிறது என்பதையும் உணராமலிருந்தார்கள்.

**இது மட்டுமா? இயேசுவின் இந்த மீட்பு நடவடிக்கையினால் உலக வரலாறு கூட கிறிஸ்துவுக்கு முன் (கி.மு) கிறிஸ்துவுக்குப் பின் (கி.பி) என மாற்றப்பட்டது என்றால் யோசித்துப் பாருங்கள். எத்தனை வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மீட்பு நடவடிக்கை இது.** இன்னும் உலகில் கோடிக்கணக்கான ஜனங்கள் இந்த மீட்பில் உள்ளடங்கியுள்ளார்கள். நரகத்தில் இருந்தும் அதன் வேதனையில் இருந்தும் இயேசு கிறிஸ்துவின் மீட்பு நடவடிக்கை காப்பாற்றி பரலோகத்தை நோக்கி நகர்த்துகின்றது.

அருமையான சகோதர சகோதரிகளே! நீங்கள் என்ன செய்ய வேண்டும்? அந்த இயேசு கிறிஸ்துவையும் அவர் எமக்காய் சிந்திய இரத்தத்தையும் விசுவாசியுங்கள். **"ஆண்டவரே நான் உம்மை ஏற்றுக் கொள்கிறேன், என் பாவத்தை மன்னியும், என்னை இரட்சியும்"** என்று சொல்லுங்கள். துயரமான அடிமைத்தனங்கள், கவலைகள், வேதனைகள், வியாதிகள், கடன்கள், கண்ணீர்கள் போன்ற சிறையிருப்புக்கள் உங்களைவிட்டு நீங்கி, ஓர் பெரிய சமாதானம் சந்தோஷம் உங்கள் இருதயத்தை நிரப்பும். நீங்கள் ஆசீர்வாதமாய் வாழ்வீர்கள். உங்கள் வாழ்வு அனேகருக்கு பயனுள்ளதாய் மாறும். நம்பிக்கையுடன் இன்றே உங்களை ஒப்புக்கொடுங்கள்.




## பைபிள் என்பது....



- தொட்டால் வெறும் காகிதம்; அதை நீ படித்தால் அதுவே உனக்கு ஆயுதம்
- திறந்தால் வெள்ளைக் காகிதம்; அதைப் படித்தால் உன் மனம் வெள்ளை ஆயிடும்
- அதை நீ தூக்கினால் அது உன்னைத் தூக்கிவிடும்; அதை நீ தூக்கி எறிந்தால், நீ தொலைந்தாய்
- படித்தால் அது புதுமை; அதில் படித்ததை நினைத்தால் உன் வாழ்க்கை இனிமை
- அது வெள்ளைத் தாளில் கறுப்பு எழுத்தாயிருக்கலாம்; ஆனால் அது உன் கறுப்பு வாழ்க்கையை வெள்ளையாக்கிவிடும்
- புத்தகங்களை எழுதினவர்கள் எங்கேயோ இருக்கலாம்; ஆனால் இதை எழுதினவர் அதோடேயே இருக்கிறார்
- இதை மாற்ற முயற்சித்தவர்கள் எல்லாம் ; அதை மாற்ற முடியாமல் தங்களுக்குள் மாற்றங்களைத்தான் அடைந்தார்கள்
- இதை வாசிக்கிறவர்கள்; பிறரை நேசிக்கிறவர்களாவார்கள்
- நம் கையில் இருப்பது வெறும் வேதமல்ல; அது பரலோக பொக்கிஷம்




## ஹென்றி புளுச்சோவ்
## 1677 - 1746



### அணை நிற்போம்

நாம் வாழும் காலம் மிஷனெரி யுகம். திருச்சபைகளும் மிஷனெரி இயக்கங்களும் இணைந்து பணியாற்றும் காலமும் கூட. மேல் நாட்டு மிஷனெரிகள் இந்திய நாட்டில் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர ஊக்கப்படுத்தும் காலம். நாட்கள் பொல்லாதவைகளானதால், காலத்தைப் பயன்படுத்த ஆண்டவர் நம்மை அழைக்கும் காலம்.

ஹென்றி புளுச்சோவ் என்ற மாமனிதர் சீகன்பால்குவின் சிறந்த நண்பர். ஐரோப்பியரின் காலனி ஆதிக்கம் இந்தியாவில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்த போது, இந்திய மக்களுக்கு கிறிஸ்துவாகிய நற்செய்தியை அறிவிக்க, இந்தியாவிற்கு வந்த உடன்பிறவா சகோதரர்களே இவ்விருவர். ஜெர்மனி தேசத்தில் பிறந்த ஹென்றி புளுச்சோவ் ஹாலே கல்விக் கூடத்தில் இறையியல் கல்வி கற்றவர். ஆண்டவரின் திட்டம் ஏற்ற சமயத்தில் நிறைவேறும். தம் ஊழியர்களை சரியான நேரத்தில் அவர் தெரிந்து கொள்கிறார். டென்மார்க் அரசர் நான்காம் பிரடெரிக் மன்னரின் மூலமாக இந்திய மண்ணில் காலடி எடுத்து வைத்தார் ஹென்றி புளுச்சோ. போர்ச்சுகீசிய மொழியை படித்து சீகன்பால்குவுடன் ஊழியத்தை ஆரம்பித்தார். 1707ஆம் ஆண்டு ஐந்து போர்ச்சுக்கீசியர்கள் ஞானஸ்நானம் பெற்றனர்.

ஒருசமயம் டேனிஷ் போதகர் ஒருவர் தன் தாயகம் திரும்பும்போது தன் அடிமை வேலைக்காரப் பெண்ணை வேறொரு லூத்ரன் பெண்ணிற்கு விற்றதை புளுச்சோவ் கண்டார். சிங்கம் போலச் சீறினார். புயலெனக் கிளம்பினார். அடிமைத்தனம் மக்களிடம்

காணப்பட்டதை அடியோடு அகற்ற வீறு கொண்டெழுந்தார். மனிதாபிமானம் இல்லாத இச் செயலை மண்ணிற்குள் புதைக்க உறுதி கொண்டார். இதனால் பெரும் பகை எழும்பியது. ஆயினும், கிறிஸ்து காட்டிய வழியே சிறந்த வழி என்பதை மக்களுக்குப் போதித்தார். சமத்துவமான சமுதாயம் மலர்ந்திட வழிவகுத்தார்.

போர்ச்சுக்கீசிய மற்றும் டேனிஷ் மொழிப் பள்ளிகளை நிறுவி, சிறந்த ஆசிரியராக அவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுத்தார். சீகன்பால்குவின் மூத்த உடன் ஊழியராக செயற்பட்டு சிறந்த பணிகளை ஆற்றி, தம் தாயகம் திரும்பி போதகராக் பணியாற்றினார்.

**அன்பரே! தமிழ் மக்களுக்கும் இந்திய திருச்சபைகளுக்கும் தூணாக விளங்கிய இவரை மறக்கலாமா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: நாம் இவ்வுலகத்திற்காக உருவாக்கப் படவில்லை. நித்தியத்திற்காக உருவாக்கப்பட்டிருக்கிறோம். எனவே ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவோம் – வேதா.**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜூலை 19**



## வாட்ச்மன் நீ
## 1903 - 1972

### அன்பத்தில் இன்பம்

கம்யூனிச நாடான சீனா கிறிஸ்தவர்களை துன்புறுத்திய காலம். 1949ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுவுடைமைப் புரட்சியால் ஆயிரக்கணக்கான விசுவாசிகள் படுகொலை செய்யப்பட்டனர். ஏனையோர் சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர்.

"சீன நாட்டின் கிறிஸ்தவ தந்தை" வாட்ச்மேன் நீ என்பவரும் இதற்குத் தப்பவில்லை. சிறையில் அடைக்கப்பட்டார். சித்ரவதைகள் அவர் உடலைக் காயப்படுத்தின. சீன அரசாங்கம் அவர் அறிவுத்திறனைப் பயன்படுத்தி அறிவியல் சம்பந்தமான ஆங்கிலப் புத்தகங்களைச் சீன மொழியில் மொழி பெயர்த்ததே தவிர அவரை விடுதலை செய்ய முன்வரவில்லை.

வாட்ச்மேன் நீ சிறையிலிருக்கும்போதே அவர் மனைவி மரித்துவிட்டச் செய்தி அவரை பெரும் துயரத்திற்குள் ஆழ்த்தியது. 1972ஆம் ஆண்டு 29ஆம் நாள் மே, 30இல் வாட்ச்மேன் நீயும் தனது ஆண்டவர் பாதம் தனது உயிரைக் கொடுத்தார். சிறையே அவரின் மரணவீடாய் மாறினது.

வாட்ச்மேன் நீ ஓர் சிறந்த விசுவாச வீரர். கல்லூரி வாழ்வின் போதே தான் கண்டு கொண்ட இரட்சகரை அனைவருக்கும் அறிவிக்கலானார். "எழுப்புதல்" என்ற பத்திரிகையை வெளியிட்டு அநேகரைக் கிறிஸ்துவுக்குள் எழும்பச் செய்தார்.

எழுப்புதல் கூட்டங்கள் நடத்திக் கொண்டிருந்த வாட்ச்மேன் நீ, சபைகளை நிறுவும் பணிகளை ஆண்டவர் தனக்குத் தருவதை உணர்ந்தார். 1949க்குள் 400இற்கும் மேற்பட்ட சபைகள் எழுப்பப்பட்டது. ஒவ்வொரு சபையிலும் "மேற்கொள்வோர் ஐக்கியம்" என்ற அமைப்பை ஏற்படுத்தி சபைகளை உயிருள்ள சாட்சியாக நிலைக்கச் செய்தார்.

அனுதினமும் தனது தேவைகளுக்காக ஆண்டவரையே சார்ந்திருந்து ஆண்டவரின் மகிமைக்காக இதே நாளில் வாழ்ந்து மடிந்த வாட்ச்மேன் நீ நமக்கு ஓர் முன்மாதிரியன்றோ!

**அன்பரே! எதிர்ப்புக்களின் மத்தியிலும் இடைவிடாமல் அன்பரின் பணி செய்ய ஆயத்தமா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:** எனக்கு இரண்டு தலைகள் இருந்தால் கிறிஸ்துவுக்காக அவை இரண்டுமே வெட்டப்பட வேண்டுமானாலும் நான் விட்டுவிடுவேன் – ஹென்றி வாஸ்

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" மே 29**


---

## விணாவிடை – 90
### சரியான பதில்கள்

01. யோபு – யோபு 24:19
02. மறுரூபமாக்கப்பட்டவர்கள் – 1கொரிந் 15:51-55
03. நாயீன் ஊர் விதவையின் மகன், யவீருவின் 12வயது மகள், பெத்தானியா ஊர் லாசரு – லூக்கா 7:11-16, மாற்கு 5:22-43, யோவான் 11:2-45
04. தொற்காள், ஐத்திகு – அப்போஸ்தலர் 9:36-42, 20:7-12
05. சாறிபாத் ஊர் விதவையின் மகன், சூனேமியாளின் மகன் – 1இராஜா 17:17-24, 11இராஜா 4:25-37
06. இயேசு சிலுவையில் மரித்த போது – மத்தேயு 27:50-53
07. யோவான்ஸ்நானன் – யோவான் 1:6
08. அப்போஸ்தலனாகிய பவுல் – 11கொரி 12:2, 5:17
09. அப்போஸ்தலனாகிய பவுல் – வெளி 1:10, 4:2
10. ரோமாபுரி சபை – ரோமர் 1:8

# குறுக்கெழுத்துப் போட்டி — 89

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | 02 |
| | | | | 04 | | | 03 |
| 05 | | | | | | 06 | |
| | 08 | | | 07 | | | |
| | | | | 09 | | | |
| | | 10 | | | | | |
| | | | | | | | |
| | | | | 12 | 11 | | |
| 13 | | | | 14 | | 15 | 16 |



**இடமிருந்து வலமாக**

01. தகப்பனையும் மகளையும் சுட்டெரித்தவர்கள்
04. குயவன் வீட்டுக்குப் போன தீர்க்கதரிசி
05. இந்த ஸ்திரீ தாவீதுக்கு காணிக்கை கொண்டு வந்தாள்
10. நீதிமானுடைய .......... ஜீவ ஊற்று

**வலமிருந்து இடமாக**

02. "நான் மனுஷனைப் பார்த்தா அங்கலாய்க்கிறேன்?" என்றவர்
04. இவன் தன் தம்பியினிமித்தம் கோபமடைந்தான்
07. சவுலின் அப்பா
09. ஆரோக்கியமுள்ள .............. ஜீவவிருட்சம்
12. அகோலியாப் இந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவன்
15. கர்த்தர் இவனைப் பார்த்து "உனக்குச் சமாதானம்; பயப்படாதே, நீ சாவதில்லை" என்று சொன்னார்

**மேலிருந்து கீழாக**

03. தேவன் இவரைத் தமது கண்மணியைப் போல காத்தருளினார்
06. புறாவைப் போல புலம்பின ராஜா
08. கர்த்தருடைய பார்வையில் நிர்வாணியாயிருந்த சபை

**கீழிருந்து மேலாக**

11. சகல ஜனங்களாலும் கனம்பெற்ற நியாயசாஸ்திரி
13. "பிள்ளைக்குச் சம்பவிக்கப்போகிறது இன்னதென்று அவன் உனக்கு அறிவிப்பான்" எனக் கூறியவன்
14. தந்தையைப் போலவே தானும் கர்த்தரின் ஆலயத்திற்குள் பிரவேசியாதிருந்தவன்
16. "நீ மலைகளின் நிழலைக் கண்டு மனுஷர் என்று நினைக்கிறாய்" எனச் சொன்னவன்

ஆவது ஆண்டில்...

# சீயோன் தேவாலயம்




ஆண்டவருடைய அளவற்ற பெரிதான கிருபையினால் சீயோன் தேவாலயம் 60ஆவது ஆண்டுக்குள் நுழைகிறது. இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணத்தில் இவ் ஊழியங்களை 1959ஆம் ஆண்டுகளில் ஸ்தாபித்த கர்த்தருக்குள் நித்திரையடைந்த போதகர் C.P.D. அருமைநாயகம் அவர்களுக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துவதுடன் அவருடைய குடும்பத்தினருக்கும் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல 1976 நவம்பர் மாதம் தொடக்கம் 2014 நவம்பர் மாதம் வரை இந்த திருச்சபையை வழிநடத்தி பல கிளைச்சபைகளை ஸ்தாபித்து, பல ஊழியர்களை உருவாக்கி தலைமைதாங்கி வழிநடத்திய எமது முன்னாள் தலைமைப்போதகர் J.K.பிலிப் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்தோடு எமது திருச்சபையில் பணியாற்றி, கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது அருமை தேவ ஊழியர்களையும் இந் நேரத்தில் நினைவுகூருகின்றேன். அத்தோடு அவர்களது குடும்பங்களை ஆண்டவர் தாமே ஆசீர்வதிப்பாராக.

மேலும், தற்போது வரை தொடர்ந்தும் எமது திருச்சபையின் ஊழியங்களில் உண்மையும், உத்தமமுமாய் பணியாற்றும் அனைத்து ஊழியர்களுக்கும், தொடர்ந்து நிலைத்திருக்கும் விசுவாசிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"இதுவரைக்கும் உதவிய எபினேசர் இனியும் உதவி செய்வார்". திருச்சபையை சகல வழிகளிலும் தாங்கி, உதவி செய்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், தொடர்ந்தும் எமது ஊழியங்களுக்காக ஜெபித்து தாங்கிக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

**போதகர் ஜோஹணன் டேவிஸ் பிலிப்,**
தலைமைப்போதகர்,
சீயோன் தேவாலயம் - யாழ்ப்பாணம்.




போதகர் ஜோஹனன் டேவிஸ் பிலிப்,
தலைமைப்போதகர், சீயோன் தேவாலயம், யாழ்ப்பாணம்




## நினைவுகூரும் ஆண்டு

**கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார்.**
**சங்கீதம் 115:12**

பிறந்திருக்கும் இவ் 2019ஆம் ஆண்டு முதல் அனல் சஞ்சிகை ஊடாக உங்கள் ஒவ்வொருவரையும் சந்திப்பதில் ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

**இவ் 2019ஆம் ஆண்டிற்குள் நம்மை காலடி எடுத்து வைக்க கிருபை செய்த ஜீவனுள்ள தேவனைத் துதிக்கிறேன். அனல் வாசகர்கள் அனைவருக்கும் யாழ்ப்பாணம் சீயோன் தேவாலயத்தின் சார்பிலும், எனது சார்பிலும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களையும் ஆசீர் வாதங்களையும் தெரிவித்துக் கொள்கின் றேன்.**

கடந்த 2018ஆம் வருடத்தில் கர்த்தர் நமக்கு கொடுத்த வாக்குத்தத்தம்;

**ஏசாயா 41:10b என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்.**

இந்த வாக்குத்தத்தத்தின்படி **"ஆண்ட வருடைய நீதியையும் அவருடைய வல்லமையான வலது கரத்தையும், அவர் நம்மை கீழே விழவிடாமல் தாங்கிய தையும்"** நினைத்து அவரை துதிப்பது மட்டுமல்லாது அநேகருடைய சாட்சிகள் மூலம் கர்த்தர் தம் வசனத்தில் உண்மை யுள்ளவராய் இருந்தார் என்பதை அறிந்து அவர் ஒருவருக்கே துதிகன மகிமையைச் செலுத்துவதில் பெரும் மகிழ்வடைகின் றேன்.

**இன்று பிறந்திருக்கும் 2019 ஆம் ஆண்டு சீயோன் திருச் சபைக்கு முக்கியமான ஒரு மைல்கல் ஆசீர்வாதமாக இருக் கிறது. கர்த்தருடைய சுத்த கிருபையினால் நாம் திருச் சபையாக 60ஆவது ஆண்டிற் குள் பிரவேசிக்கின்றோம்.**

**இத்தருணத்தில் கர்த்தர் நமக்கு கொடுக்கிறதான வாக்குத்தத்தம்:**

**சங்கீதம் 115:12 கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர் வதிப்பார். Psalms 115:12 The LORD hath been mindful of us: he will bless us.**

இந்த கர்த்தருடைய வார்த்தையின்படி இவ் ஆண்டு முழுவதும் நம்மை நடத்திச் செல்வதற்கு அவர் வல்லமையுள்ளவராக இருக்கிறார். கடந்த வருடத்தில் நீங்கள் முகம்கொடுத்த பல சூழ்நிலைகளினால் ஒருவேளை கலங்கிப்போய், நட்டாற்றில் விடப்பட்டவர்களைப் போல எண்ணலாம். ஆனால் இந்த வருடத்தில் நிச்சயமாக கர்த்தர் உங்களை நினைத்து ஆசீர்வதிக்க வல்லமையுள்ளவராக இருக்கிறார்.

*தேவாலயம் ஒன்றில் ஒரு ஞாயிற்றுக்கிழமை ஆராதனை ஆரம்பமாகியது. வழமை போன்று அந்த தேவாலயத்திலும் பாடல் ஆராதனை வேளை முடிவுற்று பின்னர் அந்த சபை யின் போதகர் எழுந்து நின்று சில வார்த்தைகளைப் பேசி விட்டு, தேவ வார்த்தையை நான் பிரசங்கிப்பதற்கு முன்பாக நம்மத்தியில் ஒரு அதிவிசேட நபர் இருக்கிறார். அவருக்கு சந்தர்ப்பம் கொடுக்க விரும்புகி றேன். எனவே அவர் முன்பதாக வந்து தனது உள்ளத்திலிருந்து சில வார்த்தைகளைப் பேசுவார், என்று கூறிவிட்டு அமர்ந்து*

விட்டார். அப்போது அந்த விசேஷித்த நபர் மிக மெதுவாக எழுந்து, மிகவும் தள்ளாடியபடி நடந்து பிரசங்க பீடத்தில் நின்று பேச ஆரம்பித்தார். ஒரு தகப்பன், அவருடைய ஒரே மகன், அந்த ஒரே மகனின் நெருங்கிய நண்பன். இந்த மூன்று பேரும் ஒரு நாள் ஆழ்கடலில் கப்பலில் பிரயாணம் செய்து கொண்டிருந் தார்கள். அவர்களது பிரயாணம் மிக அமைதியாகவும் சுமுகமாக வும் தான் காணப்பட்டது. ஆனால் இப்போது அவர்கள் சற்றும் எதிர்பாராது திடீரென கடல் கொந்தளிக்க ஆரம்பித்தது. காற்று பலமாக அவர்கள் கப்பலில் மோதியதால் அவர் களால் கரை திரும்ப முடிய வில்லை. அந்த தகப்பன் மிகத்திற மையான ஓர் மாலுமி. ஆனாலும் அவரால் அந்தக் கப்பலை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியவில்லை. இறுதியில் அந்தக் கப்பல் கடலுக்குள் கவிழ்ந் தது, அதனால் அம் மூவரும் கப்பலில் இருந்து கடலுக்குள் தூக்கி வீசப்பட்டார்கள். இப்போது இந்த தகப்பனுடைய கரத்தில் அவர்கள் காப்பாற்றப் படுவதற்கு ஒரு கயிறு மட்டும் காணப்பட்டது. பயங்கரமான அந் நொடிப்பொழுதில் இந்த தகப்பன் தன் வாழ்வில் எடுக்க வேண்டிய முக்கிய முடிவுக்குத் தள்ளப்பட்டார். ஏனென்றால் அவரால் அப்போது ஒருவனை மட்டும் தான் காப்பாற்ற முடியும். ஆகவே தனது மகனை நோக்கியா? அல்லது மகனின் நண்பனை நோக்கியா அந்தக் கயிற்றை வீசுவது? என்று நினைத்தார். அப்போது உடனடியாக அந்த தகப்பன் நினைத்தார், என் மகன் கிறிஸ்தவன் அவன் மரித்தாலும் நிச்சயம் பரலோகம் சென்றுவிடு வான். ஆனால் மகனின் நண் பனோ அப்படி அல்ல. ஆகவே அந்த தகப்பன் அந் நேரத்தில் மிகக் கடினமான முடிவை எடுத்தார். அவர் தன் மகனை நோக்கி சத்தமாய், "மகனே நான் உன்னை மிகவும் அதிகமாய் நேசிக்கிறேன்" என்று கூறிக் கொண்டு அந்தக் கயிற்றை மகனின் நண்பனை நோக்கி எறிந்தார். அப்போது எந்த உதவியும் இல்லாமல் கடலில் தத்தளித்துக் கொண்டு தன் சொந்த மகன் தன் கண்ணுக்கு முன்னால் கடலில் அடித்துச் செல்லப்படுவதை பார்த்தார். அவருடைய இருதயம் சுக்கு நூறாக நொருங்கியது. ஆனாலும் தன் மகனின் நண்பனை அந்த தகப்பன் காப்பாற்றினார். இதைக் கூறிய போது அந்த ஆலயத் திற்குள் இருந்தவர்கள், இது நல்ல கதை தான் ஆனால் இது நடைமுறைச்சாத்தியமற்றது. இது நடைமுறைக்கதையல்ல மாறாக சிறந்த கட்டுக்கதை

என்றார்கள். அப்போது அந்த முதியவர் கூறினார், இது கட்டுக் கதை அல்ல, இது நிஜம். இதற்கு சிறந்த சாட்சி நானே! அந்த திறமையான மாலுமி தான் நான். என் மகனை சாகக் கொடுத்தவன் நான் தான் என்று சொன்ன போது அங்கே இருந் தவர்கள் அதிர்ந்து போனார் கள். அந்த முதியவர் தொடர்ந்து கூறினார், அது மட்டுமல்ல, என் மகனை பலியாக்கி நான் காப்பாற்றிய துன்மார்க்க மாக வாழ்ந்த அந்த நண்பன் தான் இப்போது உங்கள் போதகர் என்றார்.

ஆம் அன்பார்ந்தவர்களே, என்னையும் உங்களையும் இந்த முழு மனுக்குலத்தை யும் படைத்த படைப்பின் காரணராகிய தேவன் நாம் அழிந்து போகக்கூடாது என்று எம்மை நினைவுகூர்ந்ததினால் தான் தன்னுடைய ஒரே பேறான குமாரன் என்றும் பாராமல் பாவிகளாக வாழ்ந்த எமக்காக இயேசுவை தியாக பலியாக ஒப்புக்கொடுத்து எம்மை மீட்டெடுத்து இரட்சித்திருக்கிறார். இந்த உலகத்தில் தேவனுடைய மேலான இரட்சிப்பைவிட வேறு பெரிதான ஆசீர்வாதம் எதுவும் இல்லை. **ஆகவே கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார்; அவர் ஆசீர்வதிப்பார்.** இந்த 2019ஆம் ஆண்டு உங்களுக்கு நினைவுகூருதலின் ஆண்டாக இருக்கிறது. பாவிகளாக வாழ்ந்த நமக்காக தன்னு டைய சொந்த குமாரனைக் கொடுத்த தேவன் கிருபையாக நினைத்து ஆசீர் வதிப்பார்.

**ஏசாயா 49:16 இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந் திருக்கிறேன்; உன் மதில்கள் எப் போதும் என்முன் இருக்கிறது.** அவருடைய உள்ளங்கையில் நாம் ஒவ்வொருவரும் வரையப்பட்டு இருப்பதி னால் நாம் கலங்க வேண்டிய அவசியம் இல்லை. நாம் ஒரு நாளும் அவரால் மறக்கப்படுவதில்லை. அவர் எப்போதுமே நம்மை நினைக்கிற ஆண்டவர். ஆகவே இந்த வருடம் அவர் நிச்சயம் நம் குடும் பத்தை ஆசீர்வதிப்பார், நம் பிள்ளைகளை ஆசீர்வதிப்பார், நம்மை ஆசீர்வதிப்பார் என்று விசுவாசியுங்கள். ஏனென்றால் விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்.

ஆகவே இன்று பிறந்திருக்கும் இவ் 2019ஆம் ஆண்டில் கர்த்தர் நம்மை நினைப்பதால் எமக்கு எப்படிப்பட்ட ஆசீர்வாதங்கள் உண்டாகும் என்பதைக் குறித்து தொடர்ந்து வேதாகமத்தின் அடிப்படையில் ஆராய்ந்து பார்க்கலாம்.

## 01. நமக்கு ஆசீர்வாதம்

**சர்வலோகத்தின் ஆண்டவர் நம்மை நினைக்கும் போது நிச்சயம் அந்த நினைவு நமக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும்.** இதற்கு சிறந்த உதாரணம் ரூத் என்கிற மோவாபிய பெண். இவள் அந்நிய இனத்தவள், தேவனை அறியாத வள். ஆனால் இப்படிப்பட்ட ஒரு அந்நிய பெண் கூறிய காரியம் என்னவென்றால்; **ரூத் 1:16 அதற்கு ரூத்: நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும் பிப்போவதைக்குறித்து, என்னோடே**

**பேசவேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்.** அவளது மாமியாகிய நகோமி இஸ்ரவேலின் தேவனின் ஜனத்தைச் சேர்ந்தவள். ஆனால் இங்கே ரூத் தன் மாமியாரைப் பார்த்து சொல்கிறாள்: **"உம்முடைய தேவன் என்னுடைய தேவன்"** என்று. ரூத் ஜீவனுள்ள ஆண்டவரைத் தன் தேவன் என்று விடாப்பிடியாக சொல்கிறாள். ரூத் இவ்வாறு விடாப்பிடியாக தேவனைப் பற்றிப்பிடித்துக் கொண்டபடியால் அவள் அந்நிய ஸ்திரீயாக, குழந்தை அற்றவளாக, வாழ்க்கை இழந்த விதவையாக இருந்தாலும், அவள் ஜீவனுள்ள தேவனை விடாப்பிடியாக பற்றிக் கொண்டபடியால் **"ஆண்டவர் அவளை நினைவுகூர்ந்தார்".**

இந்த சம்பவத்தின் பிற்பாடு மோவாபிய ஸ்திரீயாகிய ரூத் தன் அறிக்கையின்படியே இஸ்ரவேலின் தேவனைப் பற்றிப்பிடித்துக் கொண்டு தன் மாமியாருடன் கூட எருசலேமுக்கு கடந்து வருகிறாள். அங்கே அவள் வந்து தன் மாமியாருடன் கூட இருந்து அவளுடைய சொற்படி காரியங்களைச் செய்கிறாள். இவ்வாறு காரியங்கள் நடைபெற்ற பிற்பாடு அவளைப்பார்த்து போவாஸ் கூறிய காரியம்: **ரூத் 2:12 உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன்கிடைப்பதாக என்றான்.**

ரூத் எந்த மனுஷனுக்கு கீழ், எந்த வயலில் கதிர்களைப் பொறுக்கும்படி ஏழையாக சென்றாளோ, இறுதியில் அந்த வயலுக்கே அவள் உரிமையாளராகும்படி ஆண்டவர் **அவளை நினைத்து, உயர்த்தி ஆசீர்வதித்தார்.** மாத்திரமல்ல **அவளுடைய சந்ததிக்கு ஊடாகவே இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு வந்தார்.** இந்த மேலான ஆசீர்வாதத்தை கர்த்தர் அவளுக்கு கொடுத்தார்.

எனக்கு அன்பார்ந்தவர்களே, ஒரு வேளை நீங்களும் ரூத்தைப் போன்று எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியான நிலையில் இருக்கலாம். எங்களை நினைத்து எங்களுக்கு உதவி செய்ய, கரம் கொடுக்க, எம்மை விசாரிக்க யாரும் இல்லையே என்ற கலக்கத்திற்குள்ளாக கடந்து சென்று கொண்டிருக்கலாம். ஆனால் நீங்களும் கூட இப் புதிய ஆண்டில் கர்த்தர் உங்களை நினைக்கத்தக்கதாக ஓர் உன்னத வாழ்வு வாழ தீர்மானிக்கும் போது நிச்சயம் அவர் நம்மை நினைப்பார். அப்பொழுது பரலோகத்திலிருந்து ஆசீர்வாதம் நம்மை நோக்கி கடந்து வரும். ரூத்தின் வாழ்க்கையில் காணப்பட்ட எல்லாவிதமான அங்கலாய்ப்புக்களும் சந்தோஷமாக மாற்றப்பட்டதைப் போன்று உங்கள் குடும்பத்தின் எல்லாவிதமான அங்கலாய்ப்புக்களையும் கர்த்தர் இந்த வருடத்திலே சந்தோஷமாக மாற்றுவார்.

## 02. பிறருக்கு ஆசீர்வாதம்

கர்த்தர் நம்மை நினைக்கும் போது, நமக்கு மாத்திரமல்ல, நமது நிமித்தம் பிறருக்கும் ஆசீர்வாதம் உண்டாகும். அதினால் பிறருக்கு ஆசீர்வாதத்தின் வாய்க்காலாக நாம் மாறமுடியும் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் ஆண்டவர் உங்களுக்கு கொடுக்கிறார்.

ஆபிரகாம் தேவனால் பிரத்தியேகமாக தெரிவு செய்யப்பட்ட ஒருவன். அவன் ஆண்டவருடைய வார்த்தைக்கு கீழ்ப் படிந்து தன் இனத்தையும், தன் தகப்பன் வீட்டையும் விட்டு புறப்பட்ட ஒருவன். இப்படிப்பட்ட ஒருவன் ஆண்டவருக்கு மிக நெருக்கமானவன். இந்த சம்பவங்களைப் பார்க்கும் போது ஒரு இடத்தில் ஆண்டவர் சொல்கிறார்: **"நான் செய்யப்போவதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ?"** என்று. **ஆதியாகமம் 18:18 நான் செய்யப் போகிறதை ஆபிரகாமுக்கு மறைப் பேனோ?** இவ்வாறு ஆண்டவரே கூறக் கூடிய உன்னதநிலையில் ஆபிரகாம் வாழ்ந்தான்.

சோதோம் கொமோரா பட்டனங்களின் பாவங்களின் நிமித்தம் அந்த பட்டனங் களை அழிக்கும்படி தேவன் புறப்பட்டார். ஆனாலும் அந்த நேரத்தில் ஆண்டவர் ஆபிரகாமை நினைத்தபடியால் அங்கே குடியிருந்த அவனுடைய உறவினனாகிய லோத்துவையும் அவன் குடும்பத்தையும் காப்பாற்றினார் என்பதை நாம் அறிவோம். **ஆதியாகமம் 19:29 தேவன் அந்தச் சமபூமியின் பட்டணங்களை அழிக்கும் போது, தேவன் ஆபிரகாமை நினைத்து, லோத்து குடியிருந்த பட்டணங்களைத் தாம் கவிழ்த்துப்போடுகையில், லோத்தை அந்த அழிவின் நடுவிலி ருந்து தப்பிப்போகும்படி அனுப்பி விட்டார்.** இந்த வசனத்தைப் பார்க்கும் போது மிகத்தெளிவாக ஆபிரகாமின் நிமித்தமே ஆண்டவர் லோத்துவைக் காப்பாற்றினார் என்பது புரிகிறது.

பிரியமான தேவ ஜனமே நீங்களும் பிறந்திருக்கும் இப் புதிய ஆண்டில் ஆபிரகாமைப் போல ஆண்டவரோடு நெருக்கமாக உறவாடும் போது, அவரு டைய வார்த்தையின்படி நடக்கும் போது உங்கள் நிமித்தம் **கர்த்தர் நிச்சயமாக மற்றவர்களைப் பாதுகாப்பார்.** குடும்பத் தில் கணவனைக் குறித்த கலக்கத்தோடு இருக்கிறீர்களா? மனைவியைக் குறித்த வேதனையோடு காணப்படுகிறீர்களா? பிள்ளைகளைக் குறித்த ஏக்கத்தோடு வாழ்கிறீர்களா? ஒன்று செய்யுங்கள், ஆபிரகாமைப் போல நீங்கள் ஆண்டவ ரோடு தனிப்பட்ட உறவில் முன்னேறிச் செல்லுங்கள். உங்கள் நிமித்தம் கர்த்தர் உங்கள் சொந்தங்களை இரட்சித்து அவர்களையும் தம் அண்டை சேர்த்துக் கொள்ள வல்லமையுள்ளவராக இருக்கி றார். இந்த புதிய ஆண்டில் நீங்கள் குடும்பமாக தேவனை ஆராதிக்கத்தக்க பெரிதான காரியத்தை உங்கள் குடும்பத் தில் அவர் செய்வார்.

இன்று பிறந்திருக்கும் இப் புத்தாண் டில் இத் தேவ செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் அருமையானவர்களே!

இந்த வருடம் கர்த்தர் நம்மை நினைவுகூருகிற வருடமாக இருக்கிறது. ஆகவே **"கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார்; அவர் நிச்சயமாக நம்மை ஆசீர்வதிப்பார்!.** அவர் நம்மை நினைக்க வேண்டும் என்றால் அவருக்கு பிரியமாக வாழும்போது மாத்திரமே அது நிகழும். எனவே எந்த சந்தர்ப்ப சூழ்நிலையிலும் இந்த ஆண்டில் அவருக்கு பிரியமாக வாழ்வோம் என்ற உறுதிப்பாட்டை நாம் மேற்கொண்டு எம்மை முழுவதும் அவருக்கு அர்ப்பணிக்கும் போது நிச்சயமாக அவர் தன்னுடைய உள்ளங்கையில் எம்மை வரைந்து கொள்வார். அப்படி ஆண்டவர் நம்மை வரையும் போது நாம் ஒரு போதும் அவரால் மறக்கப்படாமல் அவரால் எப்போதும் நினைவுகூரப்படுவோம். அவர் நினைவுகூரும்போது பரலோகத்தின் கதவுகள் நமக்காக திறக்கப்பட்டு அவரால் உதவியும் ஒத்தாசையும் நமக்கு கிடைக்கும். அவர் நம்மை நினைத்திருக்கிறார்; நிச்சயம் நம்மை ஆசீர்வதிப்பார். மீண்டும் அன்பின் புதுவருட நல் வாழ்த்துக்களையும் ஆசீர்வாதங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**"ஆண்டவர் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக"**









**வேதப்பகுதி: யாத்திராகமம் 20:8—12**

தினகரன் பரீட்சை நாட்களில் இரவில் நெடுநேரம் படித்துக் கொண்டிருப்பான். அதிகாலையில் சீக்கிரம் எழுந்து படித்துக் கொண்டிருப்பான். ஆனால் பக்கத்து வீட்டு சுனில் ஒருபோதும் அப்படிப்படிப்பதில்லை. ஏன் நீ பரீட்சை நேரங்களில் இரவிலும், அதிகாலையிலும் படிக்காமலிருக்கிறாய்? என்று கேட்டான் தினகரன் சுனிலிடம். "படிக்க வேண்டிய நேரத்தில் சரியாக படித்துவிடு. அப்பொழுது இரவில் கண்விழிக்கவோ, அதிகாலையில் எழுந்து படிக்கவோ தேவையில்லை என்று என்னுடைய அப்பா சொன்னார். எனவே எல்லாவற்றையும் நான் சீக்கிரம் படித்துவிடுகிறேன்" என்றான் சுனில்.



ஆம் சரியான நேரங்களில் ஒழுங்காக செய்ய வேண்டிய வேலைகளைச் செய்து முடித்துவிட வேண்டும். அப்போது ஓய்வு எடுக்க வேண்டிய நேரத்தில் சிரமப்படத்தேவையில்லை. படிக்க வேண்டிய நேரத்தில் விளையாடாதே, டி.வி பார்க்காதே. பாடங்களில் கவனம் செலுத்து.

**சிந்தனைக்கு:-** எதையும் அதற்குரிய நேரத்தில் செய்திடப்பழகு. ஓய்வு எடுக்க வேண்டிய வேளையில் ஓய்வு அவசியம்.

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! — ஆகஸ்ட் II

**இடமிருந்து வலமாக**

01. நெகேமியா (நெகேமியா 2:2)
03. சாலொமோன் (11நாளா 2:5)
07. ஏசாயா (ஏசாயா 30:18)
09. லோத்து (ஆதி 19:19)
12. புபிலியுவின் (அப் 28:8)
15. அப்பொல்லோ (அப் 18:24)

**வலமிருந்து இடமாக**


02. அபிசாய் (11சாமு 23:18)
08. ஆயக்காரன் (லூக் 18:13)
10. எலிகூ (குழம்பியுள்ளது) யோபு 32:6
11. இஸ்மவேல் (ஆதி 21:20)
14. சொர்க்கியுபவுல் (அப் 13:7)
16. தாவீது (சங் 17:8)

**மேலிருந்து கீழாக**

04. யோபு (யோபு 19:6)
05. சாலொமோனுக்கு (1இரா 4:29)
08. ஆகூர் (நீதி 30:2)

**கீழிருந்து மேலாக**

06. நகோமி (ரூத் 2:19)
07. ஏசாயா (ஏசாயா 13:10)
13. அப்சலோமின் (11சாமு 18:17)




# குறுக்கெழுத்துப் போட்டி - 88

## சரியான விடை எழுதியவர்கள்

### குறுக்கெழுத்துப் போட்டி - 88, வினா விடை - 90

**காரைநகர்**
01. பா.டிலானி
02. ம.மதுஷன் டேவிட்
03. பா.கோமதி
04. பா.மோகனதாஸ்
05. ம.டயானி
06. லோ.வதனி
07. த.றசாந்தினி
08. கோ.மவுசிகா
09. இ.றதிக்கா
10. நா.கிருஷன்
11. நா.கிறிஸ்ரீன்
12. நா.அன்னாள்
13. நா.கிறிஸ்தீனா
14. வி.அனுராதா
15. பா.அனுசியா
16. பா.அனுகரன்

**நாவற்குழி**
17. அ.மேரி
18. அ.ஜெறோம்

**யாழ்ப்பாணம்**
19. எப்.ஜெசிதரன்


**மானிப்பாய்**
20. எம்.ஜெயந்தி

**வேரவில்**
21. அ.அபிசாயினி

**பாண்டவெட்டை**
22. எஸ்.டுமாழினி
23. சி.சிவனேஸ்வரன்
24. மு.ஜெசிந்தா

**கனடா**
25. எஸ். குகன் குடும்பம்

வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்



# வைரமொழிகள்...

*ஆவியில் எளிமையுள்ளவர்களாய் இருப்பதால் மாத்திரமே அபிஷேகத்தில் தங்கியிருக்க முடியும்.*

**இந்த சந்ததிக்கு தேவனுடைய கிரியை தெரியும்**
**சிலருக்கே தேவனுடைய வழி தெரியும்**

ஆட்டுக்குட்டியாக ஆனால் அதிகாரத்தில் இருப்பவர் இயேசு

*இயேசு அவர் மேய்ப்பன்; ஆட்டுக்குட்டியானார்*
*அவர் ஆசாரியன்; ஆனால் பலிப்பொருளானார்*

*வாக்குத்தத்தங்களைவிடவும் தேவனைப் பிடிப்பது சிறந்தது*

நீ குணப்பட்டபின் குணமாக்கு, மற்றவரை என்றார் இயேசு
ஆனால் குணமாகாமல் குணமாக்குவது கிறிஸ்தவத்தில் பெரும் ஏமாற்றுதல்



2019

**சரியான விடை எழுதியவர்களில்**
**பரிசுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:**

**வினாவிடை - 90** | **குறுக்கெழுத்துப் போட்டி - 88**



இ.றதிக்கா
காரைநகர்

அ.ஜெறோம்
நாவற்குழி




## அன்பின் அனல் வாசகர்களே!

கடந்த வருடம் முழுவதும் அனல் சஞ்சிகை மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு நன்மைகளுக்காகவும், ஆசீர்வாதங்களுக்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துகின்றோம். தொடர்ந்தும் நீங்கள் பெற்றுக் கொண்ட நன்மைகளை எமக்கு எழுத மறவாதீர்கள்.

அத்துடன் உங்கள் ஜெபத்தேவைகளை தொடர்ந்தும் எமக்கு எழுதுங்கள். உங்களுக்காக நாம் ஜெபிக்க காத்திருக்கிறோம்.

மேலும் எதிர்வரும் வருடத்திலும் உங்கள் பிரதிகளை சிரமம் இன்றி பெற்றுக்கொள்வதற்கு உங்கள் சந்தாக்களைப் புதுப்பித்துக் கொள்வதுடன், புதியவர்களுக்கும் இதனை அறிமுகப்படுத்திவையுங்கள். **அத்துடன் இவ் வருடம் தொடக்கம் அஞ்சல்கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தா கட்டணங்கள் சற்று அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதுடன், கட்டணம் தொடர்பான விபரங்களை "சந்தா விபரப்பகுதியில்" பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்.**

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

# அனல் சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

## Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 245.00 |
| இந்தியா (India) | 490.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 1015.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 525.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 510.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 850.00 |

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / **ZION CHURCH** என எழுதப்பட வேண்டும்)

சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:..........................................................................

முகவரி:..........................................................................

..........................................................................

..........................................................................


இனிய புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்!
2019
Wish You a
Happy New Year
To:
Zion Church Office,
No. 347, Navalar Road,
Jaffna, Srilanka.
அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351